556

உ

சிவசாம்பவிதுணை.

ஸ்ரீமர்த்தனி

திருக்கல்யாண நாடகம்.

556
II-1911

இஃது பதினெண் சித்தர்களில் ஒருவராகிய வியாசமுனிவர்
வடமொழியிலியற்றியிருந்ததைகூடலூர்தாலூக்கா தூக்க
ணம்பாக்கம் காந்தமாரிஷி கோத்திரம் மகா-ள-ள-ஸ்ரீ
பாவாடைக்கிராமணி குமாரர் வைத்தியம்

நடேசக்கிராமணியாரவர்களால்

பாடியதை

நெல்லிக்குப்பம் ஷாப்பவியாபாரம்

ஆர்-வரதைய்ய நாயுடு.

சகலசுதந்தரமும் பெற்றுக்கொள்ளப்பட்டு தமது

ஸ்ரீவரலக்ஷ்மிவிலாச அச்சுக்
[illegible]ில் பதிப்பிக்கப்பட்டது.

1911 [அணா 6

ரிஜிஸ்டர்காப்பிரைட்.

0-,891 ...
N11
85833

உ

சிவசாம்பவி துணை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - JUN 1911
MADRAS.

ஸ்ரீமந்தனி

திருக்கல்யாணநாடகம்.

இஃது பதினெண் சித்தர்களில் ஒருவராகிய வியாசமுனிவர் வடமொழியிலியற்றியதை கூடலூர் தாலூக்கா அக்கனூர் பாக்கம் காந்தமாரிஷி கோத்திரம் மகா-ள-ள-ஸ்ரீ பாவாடைக்கிராமணியார் குமாரர் வைத்தியம்

நடேசக்கிராமணியார் அவர்கள்

பாடியதை

நெல்லிக்குப்பம் ஷாப்புவியாபாரம்

ஆர்-வரதைய்யநாயுடு,

சகல சுதந்தரமும் பெற்றுக்கொள்ளப்பட்டு தமது

ஸ்ரீவரலக்ஷ்மிவிலாசஅச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை] 1911. [அணா 6

ரிஜிஸ்ட்டார் காபிரைட்.

உ

கடவுள் துணை.

இந்நாடகத்தை அச்சிட்டுக்கொண்ட கூடலூர் தாலூக்கா
நெல்லிக்குப்பம் மகா-ா ா-ஸ்ரீ இராமசாமிநாயுடு குமாரர்
ஷாப்பு வியாபாரம் மகா-ா-ா-ஸ்ரீ

வரதைய நாயுடு அவர்கள்மீது,

இன்நூலாசியர்பாடிய கீர்த்தனை தரு.

பல்லவி.

வரதையநாயுடும்மைப்போலே எனக்கின்பன்
வாய்ப்பதரிது புவிமேலே

அநுபல்லவி.

அரவளரும்நெல்லிக்குப்பமீதினில்வாசா
அன்பாயென்நாடகத்தை அச்சியற்றியனேசா (வர)

சரணங்கள்.

கமலத்திருநயனக் கார்வண்ணன்பதமலர்
கருதுரும சுவாமியும்மெய்யா—நோற்ற
கனதபமாங்கடல் மீதிலுதித்தச்சந்திர
கனகரத்தினமெனு மெய்யா
சமனில்லாதபல சாஸ்த்திரபுருணத்தைச்
சழக்கரக்கற்றக் கெம்பீரு—எழில்
சரசரதிநிகர்த்த வரிசைமாதர்மயங்கும்
சாரும்பூங்கணையில்லாமாரு
தரங்கவாருதிசூழ்ந்தத்தரணியின்மேலே
தானேயவதரித்தாய் கற்பகம்போலே
இரவலன்தாசனே யுனக்கொருக்காலே
யீடானமெய்யன்ப நில்லையப்பாலே (வர)
மாசரக்கற்றுக்கவி மனழ்பொழியும் பாவலர்
மதுரமொழியை கேழ்க்குமிந்திரு—வெகு
மட்டில்லாத ஷாப்புவியாபாரியென்றுமே
மானிலங்கெடிகொண்ட சுந்ரு
வாசவன்தாசற்குத் தாசனுகியொழிகி
வழிபடுஞானப்பிரகாசா—மிகு
வஞ்சனெஞ்சமுள்ள அஞ்சாத்துஷ்டருடன்
வாசம்செய்யாதகுணநேசா
சாந்தகுணம்பொருமை சாருவாருதியே
சன்மார்க்கமுள்ளோர்க் கிருநிதிதரும்பதியே
ஏந்துங்கற்புடையனின் மனைவியுந்ததியே
இலங்கும்புத்திரருடன் வாழ்குவாய்நிதியே, (வர)

உ

சிவசாம்பவி துணை.

ஸ்ரீமந்தனி திருக்கல்யாண நாடகம்.

விநாயகர் காப்பு.

அருமருந்தனைய சீமந்தனியெனு மரிவையின் றன்
திருமணமதனையானும் திரையெறியுவரிசூழ்ந்த
இரும்புவியதனில்மிக்கவினிய நாடகமாய்ப்பாட
தரு[illegible] செய்யதாளினை செய்வாமால்.

உபாசனாதெய்வம் வாலாம்பிகை துதி.

திருப்புகழ்சந்தம்

அந்தரிகௌரிமஞோன்மணியே — சிவ
சுந்தரிசூஷ்மபஞ்சாக்ஷரியே — திக
பூிந்தரவனியரன்சிந்தைமகிழ்ந்திடுங் — குணபாரி
கந்தரமீதலர்சூடுமையே — ஸ்ரீ
மந்தனிமாதுமணந்தனையே
வந்தினிதாயுலகத்தினில்நாடக

பஞ்சேனுங்கொங்கைதிரந்தெனையே மயல்
தந்துடன்ஆவிகவர்ந்துனையே தொழ
சிந்தையிலாசெயுநிந்தனை மாதர்கள் வலைநீக்கி
எந்தநன்னுவினில்குந்தியேநீ வர
புந்திமகிழ்ந்தருள்புரிகுவாயே பர
முந்துமறைமுடிவானவாலாம்பிகை முத்தேதாயே

விநாயகக்கடவுள்வருவது,கவி.

நாகமலர்சூடபொன்மாரிபெய்ய நடனங்கள்செய்யபலவாத்தியமோங்க
ஆகமனூலோதமுனியோர்கள்சூழ அமரார்காம்கூப்பவம்பிகைக்குவாம
பாகமதுதந்தவனீன்றபாலன் பலமுடனேஆகுவினிலேரியேவை
போகமுடன்புவியோர்கள்தழைத்துஓங்கர புகழ்ச்சியுடன்ஐங்கரருவருகி
(ன்றுரோ

தரு.

ஐங்கரர்வந்தார் சிவ சங்கரன்பாலன்
எங்கும்புகழ் ஆகு வாகனத்திலேரியே (ஐங்)

தும்பிக்கையாட தேவர்கள் துதித்துமலர்போட
கும்பகும்பலாய்பூதகணம் கூடிவருகவே (ஐங்)

வல்லபைமாரன் கயமுகனை வாட்டியதீரன்
நல்லயிச்சபைதழைக்க நாடியே வாருர் (ஐங்)

முனிவர்கள்சூழ அன்பர்கள் முன்வந்துதாழ
கனிபலவெடுத்து தேவகன்னியரோட (ஐங்)

பொது வசனம்.

அகோதெப்படி என்ருல் ஸ்ரீ விநாயகக்கடவுள் பிரஜன்னமாகவீற்றிருக்கையில் ஆரியதேசத்தை பரிபாலினம் செய்துவருகின்ற சித்திரவர்மருஜன் ஆசாரவாசல் கார்க்கும் கட்டியக்காரன் வருகுரவிதம் காண்க.

கட்டியக்காரன் வருவது கவி.

சீர்பெருகு ஆரியதேசம்தன்னை செம்மையுடன் ஆள்கின்ற சித்திரவர்மன் பேர்பெருகு ஆசாரவாசல்தன்னை பெருமையுட நலங்கரிக்கும் வீரதீரன் எர்பெருகு வெத்திவேல்கையில்தாங்கியிணையிலா பலபணிகளலங்கரித்து கார்பெருகுங் குழல்மடவாருனந்திக்க கட்டியக்காரனும் திட்டமுடன் வருகின்ருனே.

தரு.

ஆரியதேசத்தையாளும் வீரியனும் சித்திரவர்ம
அரசன்கட்டியக்காரன்நானே—அவர்
ஆசாரவாசல் கார்ப்பேனே (ஆரி)

கருத்தமீசையைத்தொட்டு கருங்கச்சைசுங்குமிட்டு
கதித்தச்சிங்கம்போல் துடைதட்டி—வீணரை
கண்டித்துயிருகரங்கொட்டி

நெத்தியில்வெண்ணீரணிந்து நிமலன்பாதம்பணிந்து
நிகரிலாபொற் பாகை பூண்டு—கையில்
நீண்டக்கணுப்பிரம்பைக்கொண்டு (ஆதி)
தங்கஉருமாலை எங்கும் பிரகாசிக்க
தார்வேந்தர்கள் மனங்களிக்க—நடேசன்கவி
தழைக்க வரதய்யன் அச்சியில்பதிக்க (ஆதி)

கட்டியக்காரன் வசனம்.

சருணம் சருணம் சந்திரஜடாதர மூர்த்தியாகிய விநாயகக்கடவுளே வாருதிசூழ்ந்த இப்பாரில் விளங்கும் ஆரியதேசத்தை ஒருகோல்தாங்கி உயர்ந்தரசியற்றும் சித்திரவர்மருஜன் கெற்பசுதாகரியாகிய ஸ்ரீ மந்தனியின் திருக்கல்யாண சரித்திரத்தை நவரசங்கள் அமைந்த நாடகமாய்ச்செய்து இச்சபையின்கண் நடத்துவதால் இதர்க்குயாதொரு விக்கினமும் நேரிடாமல் வரம்பாலிக்கவேண்டும் கணேசமூர்த்தியே.

விநாயகமூர்த்தி வசனம்

அவ்விதமே வரம்பாலித்தேன் நாடகத்தை நடத்துங்கள் அன்பர்களே

நூல்துவக்கம்.

சித்திரவர்மராஜன் தர்பார்.

கடலுலகு மன்னரடிபோற்றி நிர்க்க
கஜித ரத்தினமுடியிலங்கவமைச்சர்சூழ

மடமயில்போல் நடனஞ்களாடப்பெண்கள்
மானிலமெலாமதிர வாத்தியமோங்க
தடவரைபோலிருபுஜமு மசையவில்வாள்
தாங்கியே ஆரியவர்த்தன நாட்டையாளும்
திடமுடைய சித்திரவர்ம்மருஜன் மிக்க
சீர்சபையில் கொலுவாக வருகின்றாரே.

தரு.

சிறந்தஉலகமுற்றும் பரந்தபுகழ்படைத்த
சித்திரவர்மருஜன்வந்தேன் சிவ
சுப்பிரமண்யரென ஒப்பிடுந்தீரன் (சித்)

நிரந்தரமானஜோதி நிமலன்பாதத்தைப்போற்றி
நிகரிலாவேந்தனென்று ஜெயக்கொடிதனையேற்றி
சுரு—மின்னியமணி உன்னிதம்பெரிகிட
பொன்னணிமாத ரெலாமனமுரிகிட (சித்)

வரையொத்தபுயமீதில் வளயம்பளபளன்ன
மாதர்கவரி போடவே மறைமுறையதுபோலே
வேதமந்தணர் பாடவே
துரைமக்களிருபுரம் சூழவாத்தியமோங்க
சுரு—சுகபரிமளமரு வாடைகள்வீச
பகலவனெனபல பேர்களும்பேச (சித்)

தவளக்குடைபிடிக்க துவஜம்மேலேபரக்க
தரளமாலைவிலங்கவே நதிமணவனேவென்று
மிரள மனங்கலங்கவே
பவளவாயிதழுள்ள பாவையருலங்களேந்த
சுரு—பாசமானநம்பை நடனங்களாட
நேசமானகவி வாணர்கள்பாட (சித்)

கத்திகேடயவில்வாள் வெத்திவிருதுடனே
காலில்சிலம்பொலிக்கவே கலகலவென்று
மேலும்பணி ஜொலிக்கவே
சித்திரம்போலழகான புத்திமந்திரிசூழ
சுரு—செங்கரமதில் கடகங்களிலங்கிட
பங்கயமாது விலாசர்துலங்கிட

சித்திரவர்மன்-தேசவிஜாரணை.கள்தார்த்தம்:

அத்திசூழுலகோர்மெச்சும் ஆரியவர்த்னநாட்டில்
சத்தியநாதன்விண்டு சதுர்முகனலயங்கள்
நித்தியப்படிதரங்கள் நிவேத்தியகாலமாரும்
சுத்தியாய் நடத்துறுறு.

தரு.

சொல்லுவீரரிய மந்திரிமாரே
சுகபோகந் தெரிய
நல்லதுவேதியர் சொல்லு மந்திரங்களும்
அல்லது ஆரிலோர் கடமையும் செல்லுதா (சொல்)

மந்திரிகள் - கந்தார்த்தம்.

ருஜாதிருஜமார்த்தாண்ட ருஜகெம்பீரவீரு
தூசாதிதாசருகவேயுந்தன் சட்டதிட்டங்கள்போலே
பூசாதிபுஷ்பமருகாலம் பூசைபுகலும்படித்தரங்கள்
மாசாதி மாசகணக்கதுபோலே

தரு

வருவதிலென்னகுறை—செல்வம்
பெருகிவாழ்குடிகளை
திருமறையோதிடும் திகழுமந்தணர்பூஜையும்
செப்பியேஅரிலோர் கைப்பணந்தவறுமல் (வரு)

சித்திரவர்மருஜன்—வசனம்

அகோகேளும் மதியூகிமந்திரிமார்களே நமது ஆரியவர்த்தன நாட்டில் மாதமும்மாரிபெய்து சகல ஆலயங்களுக்கும் குறைவின்றி பூஜைகள் நடத்தி வருகின்றுறு அதுவன்றியும் நமக்கு கீழ்ப்பணிந்து கப்டணங்கட்டும் சிற்றரசர்கள் மரவாமல் பகுதிகட்டுகின்றுறு மந்திரி.

மந்திரிகள் வசனம்.

ருஜாதிருஜ ருஜஉத்தண்டருய ஆரியவர்த்தனநாட்டை ஆளும் எமத[illegible] தங்கள் தர்மநீதியினல் நமது நகரில் மும்மாரிபெய்து சிவாலயம் பிர்மால[illegible] ணுவாலயமென்னும் மூன்றுலயங்களும் ஆருகாலம் பூஜையும் தவறி[illegible]ப்பதுடன் சிற்றரசர்கள் முறைமுறையே பகுதிகட்டி வருகுறுர்க[illegible]

சித்திரவர்மன்கவி.

கனிவுடநீதிமார்க்கங் களையரிந்த வமைச்சரேகேள்
பனிமலர்மெத்தைமீதும் பஞ்சணைதன்னில் மீதும்
இனிமையாய்விளையாடிக் கொண்டிருக்குமென்மகளாம் ஸ்ரீமந்
தனியையிங்கழைத்தோமென்று தாதியோடுரைத்துவாரீர்.

வசனம்.

கேளுங்கோள்மந்திரிமார்களே என்தபோகுமாரத்தியாகியஸ்ரீமந்தனியை யானழைத்தேனென்று தாதியோடுரைத்து சீக்கிரத்தில் அழைத்துவாருங் கோள்மந்திரிகளே.

ஸ்ரீமந்தனிவருவ்து கந்தார்த்தம்.

சித்திரரேகையாள் தெய்வயிந்திருணியாள்
ஜெகமோகனங்கி கமலமாதை
யொத்தமின்னொளிறதியூர் வசிமேனகை
ஒப்பிலாதிலோர்த்தமை உரையிருதா
பத்தினி ஸ்ரீமந்தனிபாங்கியர்சூழவே
பரிமளாதிகள் பூசதந்தையேதா
நித்தனேநாளிலா தின்றுநம்மையழைப்ப

தரு.

தேதுயென்பாங்கிமாரே இப்போதுஜாலங்களிது
நீதுவிளையாடத்தகாது அடிமோகனங்கி

எழுந்துநடந்துவாடி யிளந்தையரேகூடி
செழுந்தசாமந்திருடி சேவிக்கலாமேஒடி எந்
திருவெனவும்அமரீத குணவதனசுந்திர
ஸ்ரீமந்தனிமாதுவந்தாள் அருந்ததிக்கிவள்மேலாய் ஸ்ரீம
மருவுமல்லிகைமுல்லை மலரெரியிலாய்முடித்து
மஞ்சரிமாலையணிந்து மாங்குயிலென
றஞ்சிதநடையன்னமோ மயிலோ
நாடி சேடி தேடி கூடியே (திரு)
திங்கள் வதனந்துன்ன திலர்தம்பளபளன்ன
சேடியர்களபம்பூசவே (இருபுரவரும்மாதர்) நாடிகவரிவீசவே
அங்கரகன்மான்விழி யானவிற்புருவத்தாள்
ஆலிலைபோல்வயிருந்தியு மெல்லிடை
மேலினில்மின்னெளி போலுழலுஞ்சடை
மெல்வி நல்வி செல்வி கல்வியாய் (திரு)
பம்பரமென்னவிரு கும்பஸ்த்தனங்கள்விம்ம
பல்முல்லையரும்பென்னவே (தங்கவலைகலகலன்ன) பாங்காய்
[கறங்தில்துன்னவே
செம்பொர்ப்பணிகுலுங்க அம்புவியோர் மயங்க
ஜெண்பகமெனவிரு நாசியிலங்க
பெண்களிலிவள் பெயரெங்கும்துலங்க
பேதை மாதர் போத கூடியே (திரு)
கஞ்சமலர்பாதத்தில் செஞ்சிலம்பொலித்திட
காரிழையர்வீணைமீட்டவே (இசையாகவேபாட) நாரியர்தம்பூரு
[கூட்டவே
பஞ்சவர்னக்கிளிபோலே கொஞ்சிநடந்திடவே
பாரினில்புடமிட்டதங் கமோவென்றுமே
சூரியொரெதிருகவேகின்றுமே
கொஞ்சி வஞ்சி அஞ்சலாகவே (திரு)

ஸ்ரீமந்தனி—வசனம்.

அகோ வாருங்கோள் என் பாங்கிமார்களே என் தந்தையாகிய சித்திரவர்ம மகாருசு அரசுசெய்யும் கொலுமண்டபம் வந்தபடியால் இனி தாமதிக்காமல் சென்று நமஸ்கரிப்போம் வாருங்கள் தாதிகளே

ஸ்ரீமந்தனி—கந்தார்த்தம்.

புத்திரியில்லையென்று பெருந்தவமிகவேசெய்து
எத்திசையோருமஞ்ச என்னையீன்றெடுத்தநாளாய்

முத்திகள்கொடுத்து உச்சிமோந்து கண்ணிமையைப்போலே
பத்தியாய் வளர்த்ததந்தையுன்

தரு

பாதமேசருணம் அழைத்ததென்ன
ஓதவே தருணம்
மாதருடன்விளையாடி யிருந்தயென்னை
ஏதுமொழியாமலே எனையழைத்திட்டீரேவுன் (பாத)

வசனம்.

சருணம் சருணம் தந்தையே உமது பொற்பாதகமலங்களுக்கு தீர்க்க வந்தனம் மாளிகையில் சேடியர்களுடன் விளையாடியிருந்த என்னை அழைத்த விபரத்தை சொல்லவேண்டும் தந்தையே.

சித்திரவர்மன்—கந்தார்த்தம்.

மானேமயிலேமாங்குயிலே என்மகளேவாழி
தேனேமொழியேதிருவுருவே தெகிட்டாவமுதே
நானேபுதல்வியில்லையென்றேங்கும் நாளையில் நீ
தானேயுதிக்கானென தபம்செய்தேனே.

த ரு.

தாயேநீவாழி எழுந்திரும்
தாயேநீவாழி
தாயயுனையழைத்த சங்கதியென்சொல்வேன்
காயேகனியேகற்கண்டே. எப்படிசொல்வேன் (தாயே)

வசனம்.

ஆசீர்வாதம் ஆசீர்வாதம் என் அருந்தபக்குமாரத்தியாகிய ஸ்ரீமஞ்சனியே உனக்கு நேரிட்டிருக்கும் கொடுமையாகிய விதியை நினைத்தால் என் மனதை அடிக்கடி மாரிமாரி தியங்கச்செய்கிறது இவ்விதிக்கென்செய்வேன் தெய்வமே அதனை வெல்லயாரால் முடியும் மகளே.

ஸ்ரீமந்தனி கவி.

வெல்லவேனோவென்று நெஞ்சமிளகியதந்தையாரே
சொல்வதற்க்கச்சமென்ன சோர்ந்துநீரழுவதென்ன

வல்லவரூனலுந்தன் வாள்முனைக்கெதிர்நில்லார்கள்
நல்லதுநடந்தவாரை நயம்படவுரைசெய்வீரே.

வசனம்.

கேளும் தந்தையே அலர்ந்த செந்தாமரை மலர்போலும் இராகின்ற உமது திருமுகம்வாடி இவ்விதம் புகல்வதற்கு காரணமென்ன சொல்லவேண்டும் தந்தையே.

சித்திரவர்மனுக்கும்—ஸ்ரீமந்தனிக்கும் தர்க்கம்.

சித்திரவர்மன் - தரு.

என்னசொல்வேனம்மா—கண்ணேநான்—என்னசொல்வேனம்மா
என்னசொல்வேனுன்னை யின்றநாள்முதலாக
சுரு-எண்ணுதேமனம் குண்ணுதேவயிர்
கண்ணுதேசதி பண்ணுதேதெய்வம். (என்

ஸ்ரீமந்தனி—தரு.

தந்தையேநீரே அழைத்ததை தானுரைப்பீரே
தந்தையேஎமன் தரவதுவந்தாலும்

சரு-தள்ளலாகுமோ எள்ளதாவது
உள்ளதாவது விள்ளுமையனே (தந்)

சித்திரவர்மன்—தரு.

சேதிகேளம்மா மகளே ஸ்ரீமந்தனிசும்மா
ஆதியிலே நீ பிரந்திட்டகாளையிலே
சரு-ஆரியமவர் நேரிலேயெதிர்
கூரிடமதி மாரிபோகுதே (சேதி)

ஸ்ரீமந்தனி

மதியதுமாற (உடலங்கள்) வாடியேசோர
எதிரிலழைத்தென்னை ஏனுமையங்குரீர்
சரு-எதுநான்புவி மீதுருக்க
தகாதுபாவியால் தீதுனேருமே

சித்திரவர்மன்—கவி.

எந்தனுக்குபெண்குழந்தை யில்லையென்று
ஏங்கினேன்நீயுதிக்க மகளேயானும்
அந்தணரையழைத்து ஜாதமேபார்க்க
அவனுரைத்தமொழிதன்னை கேளாயம்மா
சிந்தைகளிப்புடன் பதினறுமட்டும்
சிரப்புடனே மங்கிலியமிருக்குமென்றார்
நிந்தையுடனதிலொருவன் பதினேழாண்டில்
நில்லாது அமலங்கலையாவாயென்றானே.

வசனம்.

கேளும் என் செல்வக்குமாரத்தியே நீ பிரந்த ஜாதகத்தை கணிதசாஸ்த்திரத்தில் கைதேர்ந்த மறையோர்களை அழைத்து பார்க்கும்படி சொன்னேன் அதர்க்கவர் பதினறுவயது வரையில் உனக்கு சமுத்தில் மைங்கில்ய மிருக்குமென்றும் பதினேழாமாண்டில் உன் கணவன் இறந்து நீ அமங்கலயாவாயென்று சொன்னார் இதற்குதானே அரியதபமபுரிந்து உன்னை பெற்றேன் ஸ்ரீமந்தனியே.

ஸ்ரீமந்தனி—கவி.

ஐயையோசிவனே எனனை அமங்கலையென்றுசொல்ல
வையகமீது ராஜவனிதையாய் பிரக்கச்செய்தாய்

நையுதே வயிரென்செய்வேன் நாயகனிழந்துமண்மேல்
தையலாளிருந்துவீணில் தவிக்கநீ விதிவிட்டாயோ.

வசனம்.

அரகரசிவசம்போ சங்கரா மகாதேவா தாக்கணம்பாக்கம் மென்னும் திருநகரில் திருக்கோவில் கொண்டெழுந்தருளிய சிவக்கொழுந்தீசா நான் ராஜகுமாரத்தியாய்பிறந்து பதினறுவயதுவரையில் மங்கில்யமிருக்கவும் பதினேழுவயதில் அமங்கலையாகவும் சிருஷ்ட்டித்தாயோ இவ்விதிக்கென்செய்வேன் கர்த்தீபனே.

ஸ்ரீமந்தனி-தாதிக்குசொல்லல்—தரு.

தாதியரேனுனென்னுசெய்வேன் தாளவியே உயிர்மீளவியே
சுரு—தந்தை சித்திரவர்மராஜனும்
நொந்துரைத்திட வந்ததோவிதி (தாதி)
மணவில்லாமாதிருந்தும் சகியேமாதிருந்தும்
வையகத்திலென்ன செய்வதடி
சுரு—மஞ்சள் சந்தண புஷ்பகுங்குமம்
நெஞ்சுதன்னில் நினைக்கலாகுமோ (தாதி)
காட்டுக்கோளரிந்த நிலாசகியே எரிந்தநிலா
கானலுக்கில்லாமல் பெய்தமழை
சுரு—கன்னியேயதி லென்னபலனடி
வின்னமானசொல் எண்ணுமுன்னடி (தாதி)
கதலியிலேசோங்கதுபோல் வீணுசோங்கதுபோல்
கன்னியிருந்தென்ன லாபமடி
சுரு—காயமானது பாயந்தானுயிர்
மாயவேனுன் கைலாயம்சேரவே (தாதி)

வசனம்.

கேளுங்கோளடி பாங்கிமர்களே வந்தவிதியை நினைந்தால் என்மனம் நடுநடுங்குகின்றது கைகால் உதருகுறது நாவெழவில்லை ஆகையால் இனி நானிருந்து என்னலாபம் புருஷனில்லா பெண்கள் தாய்வீட்டில் சென்று சுகத்தையனுபவித்தாலும் பார்ப்பவர் இவளுக்கு புருஷனில்லாமலானே இவ்விதமிருக்குரூளென்று பலபேர் பலமாதரியாய் புகல்வார்கள் இப்போதே அக்கினிமூட்டி அதில்வீழ்ந்து சிவபேருமான் அடியில் சேருகுறேன் தாதிமார்களே.

தாதிகள்—கவி.

பாதகமானவார்த்தை பயிலுவதழகோவம்மா
மாதவயக்கியவர்த்தி மாமுனிமனவியான
சாதகமயேதிரையென்னும் தாய்பதம்பணிந்தாயானல்
வேதனையேகமந்திரம் விள்ளுவாள்கொள்ளுவாயே.

வசனம்.

சருணம் சருணமம்மா ருஜபரமேஸ்பரி தாங்கள் யாதொன்றுக்கும் சஞ்சலப்படவேண்டாம் ஒரு உபாயம் சொல்லுகுரும் அதை கவனமாய்கேளும் என்னவென்றுல் யக்கியவர்த்திமுனிவர் பாரியாளாகிய மயேதிரையம்மனைக் கண்டு இவ்விதம்கூரி மடிபிக்ஷை கேட்டால் ஏகாக்ஷரமந்திரத்தை உபதேசம் செய்வாள் அதனைப்பெற்றுக்கொண்டால் உமது எண்ணம்போல் உமது நாயகன் இரவாமல் உம்மோடு சுகித்துவாழ்வாரம்மணி

ஸ்ரீமந்தனி—கவி.

சேடியிவ்வாருகூர ஸ்ரீமந்தனிமாதுதானும்
வாடியமனதைதேற்றி மகிழ்வுடனெழுந்திருந்து
ஓடியேவருகும்போது உயர்மறைகுலமயேதிரை
நாடியேபன்னகைக்கு நலமுடன்வருகின்ருளே.

பொதுவசனம்.

தாதிகள் சொன்னவார்த்தையை ஸ்ரீமந்தனியம்மன்கேட்டு மனதைதிடப்படுத்திக்கொண்டு மயேதிரையை தேடிவருகையில் மயேதிரை பூங்காவிற்சென்று நறுமலர்கொய்து அர்க்கியவர்த்திமுனிவர் பூஜைக்குதரும்ப்டி வருவது காண்க.

மயேதிரையம்மன்-வருவது. கவி

முகிலெனுமளகபாரம் முகமதிபோல்வேல்கண்ணள்
எகினமோநடையுமென்னயினிய செம்பவளவாயாள்
சிகியதுமுகிலேசித்திர சிலையுருவானமாது
மகிதலம்புகழுகின்ற மயேதிரைவருகின்றளே.

தரு.

அக்கியவர்த்திமுனிவர் சொக்கும்பாரியாளான
ஆரியகுலமயேதிரைவந்தாள் பன்னகைநாடி—ஆரி
செக்கச்சிவந்தமாது திக்கிலும்கிடையாது
சரு-தேன்போல்மொழியானது கொஞ்சவே
மான்போல்விழியானது மிஞ்சவே—(அக்)
அங்கமதில்வெண்பூகி எங்கும்பளபளன்ன
அபரஞ்சிமாலையாடவே தகதகன்று—அக்
தங்கமயமாய்ருத்திருக்ஷம் தளதளன்ன
சரு—தற்பரனரடி யேற்றிதுதிப்பவள்
பற்பலபேரைதன்போலே மதிப்பவள்-அக்
அரகருசிவனேயென்று அலர்ந்தமலரைக்கொய்து
அன்னநடைநடந்துமே மயேதிரைமாது—அன்
கரமதில்கமண்டலமும் காவிப்பட்டாடைபூண்டு
சரு-கற்பிலருந்ததி யொப்பிமெம்பூரணி
பற்பலர்போற்றிட அற்புதமாக—(அக்)
துதிக்கும்புகழ்படைத்த ஞாக்கணைப்பாங்கம்கன்னில்
துலங்குங்காந்தம்மாரிஷியின் கோத்திரனுகிய—துல
பதிபுகழ்பாவாடைதபப் பாலன்நீடேத்தாசன்
சரு-பாடியசெந்தமிழ் சேட்டுனங்களிப்பவள்
யீடிலாபலவரமது கொடுப்பவள்—(அக்)

மயேதிரையைக்கண்டு—ஸ்ரீமந்தனி துதித்தல்—தரு.

சருணமம்மா சருணமம்மா தாளில்கோடிசருணமம்மா
சரு—தாதுபோயினுள் பேதமாகியே
மாதுவந்தாள் பாதுகாரும் நீ—(சரு)

மயேதிரை-தரு.

கன்னியரேமுன்னில்வீழ்ந்த கமலமாதேவாழிவாழி
சுரு-காறுமென்றவுன் ஊரும்பேரதை
கடருவாய்மனங் தேருவாயினி (சரு)

ஸ்ரீ மந்தனி—தரு.

பேரேரூஸ்ரீமந்தனியென்பார்கள் பிதாபேர்சித்திரவர்மராஜன்
சுரு-பேசுமாரிய வர்த்னநாட்டில்
வாசம்செய்திடும் ராஜர்நாங்களே (பேரூ)

மயேதிரை—தரு.

சித்திரவர்ம்மருஜனீன்ற செல்வியேஸ்ரீமந்தனியே
சுரு.தேடிஎந்தனை நாடியிங்கே நீ
ஓடிவந்தாய் மூடிடாமல்சொல் சித்

மயேதிரை வசனம்.

அகோகேளுமம்மா சித்திரவர்மருஜன் தபோகுமாரத்தியாகிய ஸ்ரீமந்தனியே உன் அழகிய திருமுகம்வாடி என்னை நாடிவந்த காரணமென்ன சொல்லவேண்டும் கன்னிகையே.

ஸ்ரீமந்தனி—சீசபத்தியம்.

என்னென்று சொல்லுவே னென்தலைவிதியானதை
இயம்புவேன் கேளும் நீ எந்தனம்மா
கன்னிஞனுதிக்கவே சோதிடர்தன்னை
களிப்புடனழைத்துமே எந்தன்தந்தை
முன்னிலையிருத்தியே ஜாதகம்பாரென
மூசியாமல்பதினாறு வயதுமட்டும்
சின்னமில்லாமலே மன்னனுந்தானுமாய்
சீருடனிருப்பாரென் றியம்பினாரும்
அன்னீநமாயதி லொருவனம்மா
அமங்கலைஎன்றாரும் பதினேழாண்டில்
சென்னியில்தலைவைத்த எனதுதந்தை
சேதியுரைத்திடவந்தேன் திரம்சொல்வாயே

வசனம்.

கேளும்தாயே ரிஷிபத்தினியே நான்பிரந்தபோதே ஆரியருகிய பிராமணுளேயழைத்து என்ஜாதகத்தை பார்க்கும்படிசொல்லஅதற்கவர் பதினருவய துவரைக்கும் சுமங்கலேயென்ருர் அதிலொருபொல்லாத கிழப்பிராமணன் எட்டை திருப்பி திருப்பி பார்த்துவிட்டு பதினேழாவயதில் அமங்கலேயாவாள் என்ருரும் தாங்களன்றிவேரே எனக்கு கெதியில்லே மடிபிக்ஷைதரவேண்டும் மாதாவே.

மயேதிரை—வசனம்.

ஆனல் கேளுமம்மா ருஜகுமாரத்தி அதற்கொரு தந்திரமுண்டு அது என்னவென்ருல் ரகசியமான விஷயம் உமக்கு விதிப்படி கூறுகிறேன் கேளுமம்மா ஸ்ரீமந்தனியே.

மயேதிரை—ஸ்ரீமந்தனிக்கு—சோமவாரவிரதம்
நடத்தும் முரையை சொல்லுதல்—பண்.

அம்மணியேசோமவார அருவிரதம்கேளடிநீ
செம்மையுடன்நீருடி செழித்தமலர்தனேகொய்து
நம்பகமாய்மணல்குவித்து நாரியன்போல்செய்து
சம்ரமுடன்முப்புடைக்காய் சற்கரைபால்வைத்துடனே (அம்)
பட்டாடைமேலுடுத்தி பரிமளங்கள்தான்தெளித்து
அட்டியிலாமுக்கனியோ டதிரிசமுமெள்ளுருண்டை
வெட்டாதபாக்குடனே வெத்திலேயும்மேல்வைத்து
கொட்டியதோர்பதினெட்டுகுலவியவாத்தியங்களுடன் (அம்)
தூபதீபம்தான்கொடுத்து ஆலங்கும்புருவமத்திபிலே
கோபமிலாஅரினுனி யாம்குலவியதோரக்ஷரத்தை
தாபனமாய்கிலேநிறுத்தி தாண்டிவரும்வாசியினில்
சோபமின்றிவிட்டிழுத்தால் சுயம்ஜோதிபரமேசன் (அம்)
திருநடனஒளிகாணும் தியங்காமல்தரிசித்தால்
வரும்பிரவிகடல்தாண்டி வாட்டிடுந்தீவினையொழிந்து
கருணையுடன்உலகோர்கள் கற்பிலருந்ததியென்று
மருவுமணவாளனுடன் மாருமல்வாழ்ந்திடுவாய் (அம்)

மயேதிரை—வசனம்.

கேளுமம்மா ஸ்ரீமந்தனியே இதோ ஏகாக்ஷரமந்திரத்தை உன்காதில் உபதேசம்செய்தேன் நான் முன்னே கூரியப்படி பூஜைசெய்து உன் இஷ்டத்தை பூர்த்திசெய்து கொள்ளுயம்மா.

ஸ்ரீமந்தனி—கவி.

திங்களைமுடித்தயீசர் திருவடிசிரமேற்கொண்டு
மய்களமாகச்சொன்ன வார்த்தைபோல்நானுமேவி
கங்கையில்தீர்த்தமாடி கடவுளை துதிப்பேனுந்தன்
பங்கயபாதந்தன்னை பணிந்தேனன்போரேநம்மா.

வசனம்.

சருணம் சருணந்தாயே ரிஷிபத்தினியே தாங்கள் சொன்ன உபதேசத்தை பெற்றுக்கொண்டேன் தாங்கள்கூரியப்படியே விரதத்தை அனுஷ்ட்டிக்கபோரேநம்மணி.

மயேதிரை—கவி.

வஞ்சியேபக்திவிஸ்வாசமதாக
செஞ்சடையீசன்திருவடிபணிவாய்

வசனம்.

ஆசீர்வாதம் ஆசீர்வாதம் போய்வாரும் ஸ்ரீமந்தனியே

ஸ்ரீமந்தனி—கவி.

சுந்திரதாதிமாரே சொல்லுவேன்கேளீரின்று
வந்தது சோமவார் மாகையால்நாமெல்லோரும்
உந்தியில்தீர்த்தமாடி ஓடியேவில்வம்கொய்து
சந்திரநணிந்தயீசர் தாளினைபோற்றுவோமே

வசனம்.

கேளுங்கோள்தாதிகளா இன்று சோமவாரமாகையால் நாமெல்லோரும் தீர்த்தமாடி வில்வமுதலாகிய நருமலரெடுத்து சிவபூஜைசெய்வோம் அதற்காக வேண்டிய ஜாமான்களை தயார்செய்துகொண்டு வாருங்கோள் பாங்கிமார்களே

ஸ்ரீமந்தனி சோமவாரவிரதம் செய்தல்—தரு.

காலைத்துயிலெழுந்து அரோகரா ஓம்சிவசங்கரா
கங்கையில்ஸ்னானம்செய்தேன் அரோகரா
சோலைக்குள்புகுந்தனான் அரோகரா-ஓம்-சிவசங்கரா
துரிதாய்வில்வமெடுத்தேன் அரோகரா
ஆத்திமலர்தும்பையும் அரோகரா-ஓம்-சிவசங்கரா
நின்றேனுன்பாதத்தை அரோகரா
முந்திவிநாயகர்க்கு அரோகரா-ஓம்-சிவசங்கரா
மூன்றுகுட்டுதோப்பணமும் அரோகரா
சிந்தித்தடிபணிந்து அரோகரா-ஓம்-சிவகங்கரா
சிவலிங்கமுண்டுசெய்தேன் அரோகரா
அங்கம்நிறைந்திடவே அரோகரா ஓம் சிவ சங்கரா
அள்ளிநீரணிந்தேனே அரோகரா
மங்கைபார்வதியுடன் அரோகரா ஓம் சிவசங்கரா
வந்துரக்ஷிக்கவேண்டும் அரோகரா
பரித்தமலரெடுத்து அரோகரா ஓம் சிவ சங்கரா
பாவைஅற்சித்தேனிதோ அரோகரா
சிரித்துப்புரமெரித்த அரோகரா ஓம் சிவசங்கரா
தேவாமங்கில்யம்தாரும் அரோகரா

தேவாரம்.

ஆதியே அரனேபோற்றி அருமரைப்பொருளேபோற்றி
சோதியேசுடரேபோற்றி சுடரொளிவிளக்கேபோற்றி
நீதிலாவெளியேபோற்றி திர்புரமெரித்தாய்போற்றி
வேதனையொழிப்பாய்போற்றி விமலனேபோற்றிபோற்றி.

வசனம்.

சிவசங்கரா கெங்காதரா சர்வேசா கைலாசபரமேசா யான்புரியும் தபத்துக்கிரங்கி உமாபரமேஸ்பரியுடன் விடையின்மீதுவந்து மங்கில்யபிக்ஷைதாரும் சிவபெருமானே.

பொதுகவி.

சித்தமொன்றாகவே ஸ்ரீமந்தனிமாதுதானும்
பித்தனைதுதித்துதாலிபிக்ஷைகேட்டிருக்குநாளில்

ரத்தினமகுலிதுன்ன நளச்சக்கிரவர்த்தியீன்ற
புத்திரனிந்திரஜேனன் புகழ்கொலுநாடினனே.

வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீமந்தனி சோமவாரத்தில் உமாபதியைநோக்கி மங்கில்யபிக்ஷைதரும்படி தபம்செய்து வருகிறநாளில் நிடததேசத்தைபரிபாலனம்செய்துவருகின்ற நளச்சக்கிரவர்த்தி குமாரநாகிய இந்திரஜேன மகாராஜன் சபைவாகிய கொலுவிற்கு வருவதுகாண்க.

இந்திரஜேனன்வருவது கவி.

சூத்திரெலாமோர்குடைகீழாளுந்தீரன்
கோவாணம்சிலைவில்வேல்வாள்கரத்திலேந்தி
ரத்நமுடிதகதகனஒளிகள்வீச
நாரியர்தம்பூருடனேவீணைமீட்ட
புத்திமந்திரிகளருகில்சூழ்ந்தேத்த
பூவையர்கள்நிர்த்தனம்செய்யகவரிபோட
எத்திசையும்கெடிபெற்றநிடதநாட்டில்
இந்திரஜேனராஜன் கொலுவாகினனே.

தரு.

ராஜன்வந்தேனே இந்திரமகா ராஜன்வந்தேனே
ராஜன்வந்தேனிதோ நவரத்தினமுடிமின்ன
நாகாதிபதிக்கிவன் யோகாதிபதியென்ன

சுரு—நானிலங்கெடியான சுந்திரன்
நளனுமீந்திடுமைந்தநிந்திரன் (ராஜ)

வெற்புயமோங்கபூச்சக்கிரக்குடை விரித்தெதிர்தாங்க
சற்குணமதிமந்திரி மார்புடைசூழவே
தாரணியுள்ளநாள் செங்கோலதுவாழவே

சுரு—தண்டுவேல்கெதை பிண்டிபாலமும்
கொண்டுகரமதில் றண்டுந்துன்னவே (ராஜ)

மன்னர்கள்சூழ பகைவர்கள் மகிழ்ந்தடிதாழ
கன்னல்வில்லோனெதிர் கண்டால்நெஞ்சதுகெஞ்ச
காந்திக்கதிகமிவ னென்றுகதிரோனஞ்ச

சுரு—கச்சிதப்பதி நெட்டுவாத்தியம்
முச்சிதமுடனோதவேதிரம் (ராஜ)

செந்திருவாசன் மங்கைநாயகி தேவியாள்நேசன்
சுந்திரறம்பையர் சோபனம்பாடவே
சூரவீரதீர சாரணர்நாடவே

சுரு—சுருதிமறைமுதல் கருதிநெஞ்சினில்
உருதிகொண்டற சிருந்திடும்படி (ராஜ)

வசனம்.

அகோகேளுங்கோள் மந்திரிமார்களே சாக்ஷாதிசிவபெருமானை நமஸ்க்கரித்துக்கொண்டு இந்த நிடததேசத்தை பரிபாலினம்செய்து வருகின்றேன் மந்திரிமார்களே.

இந்திரசேனன்—கவி.

பொங்கமாய்நீதிமார்க்கம் புகலுமென்மந்திரிமாரே
பங்கயவதனியெந்தன் பட்டப்பூ ஸ்ரீயாளான
மங்கைநாயகியாள்தன்னை வரவழைத்திடவேநீங்கள்
தங்கிடாதோடிதேவி தாதியோடுரைத்துவாரீர்

வசனம்.

சாமபேததானதண்டமென்கிற சதுர்வித உபாயங்கள் கற்றுணர்ந்த என் மந்திரிமார்களே என்பிராண சகியாகிய மங்கைநாயகியை நாமழைத்தோமென்று தாதியோடுகூறி அழைத்துவாருங்கோள் மந்திரிமார்களே.

மங்கைநாயகிவருவது-கவி.

மங்குலம்போல் அளகபாரம் மாமதிவதனரூபி
பங்கமேயுடுத்திமெய்யில் பணியலங்கரித்துநன்றாய்
தங்கஒட்டியானம்பூட்டி தாளினில்சிலம்புகொஞ்ச
கங்கையர்சூழமங்கைநாயகி வருகின்றாளே.

தரு.

ஜயந்தோணிந்திரஜென ருஜனக்காண மங்கைநாயகிவந்தாளே
வியந்தனில்மேவுங்கூந்தல் மீதில்பொற்பணிசூட்டி
ஜயந்தடவரைகிகர்த்த கோதைமாருடன்கூடி
கோகனகப்பதியாளெனவேயுரு
வாகவேவந்தவளாமிவளேதிரு
மாதிவட்கிணை எதிலையென
வீதியிலேபல ரோதிடவேமதி
வதனமிலகிட இதயமுருகிட (ஜய)

கச்சணிஸ்தனம்ரெண்டும் கடைந்தபம்பரம்போலே
மெச்சுங்கதம்பவாசம் வீசப்பூசந்திரன்போலே
மின்னியதங்கவளைகரமாடவே
கன்னியர்மயங்கிகவரிகள்போடவே
கஞ்சிகைவெகுரஞ்சிதங்களாய்
வஞ்சியாளுவரிந்திருக்கியே
வாரேன்கொலுநேரேயிதோ (நய)

சித்திடைஒட்டியாணம் மின்னசேடியர்மஞ்சரிசூட
தத்தைமொழிமாதரூட தம்பூருவீணைகள்பாட
தங்கமேபுடமிட்டதுபோல்வர
எங்குமேகதிர் போலொளியேதர
யீசனாரடிபூஜையைசெய்திடும்
பாசமானவிஸ்வாசமானவள்
பலபலவாத்தியங்களுமதிர
எதிரிலே சிலவனிதையர்பிதிர (நய)

காலில்சிலம்பொலிக்க கதலிதுடைகண்டேங்க
மெலியாமலேமாதர்கள் மெல்லக்குடைகள்தாங்க
அருந்ததிக்கிவளே நெறியானவள்
தருமரந்தனிலேபரிவானவள்
சாயலுமயிலாமிதுகுயில்
போலதுதொனியானவளென
பூவைதேவையாவமிலையென (நய)

மங்கைநாயகி—வசனம்

கேளும் சகிமார்களே எனது பிராணேசராகிய இந்திரஜேனமகாராசு எவ்விதகாரணத்தைமுன்னிட்டோஎன்னை அழைத்தப்படியால் வந்திருக்கின்றேன் நான் வந்திருப்பாய் இராஜபூபதிக்கு தெரிவிப்பீர் சேடிமார்களா.

இந்திரசேனனுக்கும்—மங்கைநாயகிக்கும் வினாவிடை

மங்கைநாயகி—தரு.

நாதனேசருணம் பங்கேருக பாதனேசருணம்
நாதனேயிங்கென்னை நாடியழைத்ததென்ன
ஓதுவீரென்னிட உள்ளங்களித்திட (நாத)

இந்திரசேனன்—தரு.

அன்னமேதேனேஎன்றும் சுகமாய் வாழ்குவாய்தானே
சின்னவயதானசேயன் சந்திருங்கதனுக்கு
கன்னியைத்தேடக் கருத்தென்னசொல்லடி (அன்)

மங்கைநாயகி-தரு.

சுந்திரமாரு என்னபடில் சொல்லுவேன் ஒய்யாரு
உந்தன்மனதினி லோசித்தபடியாக
எந்தனுக்கதுமேலாய் யிருக்கிறதுசுவாமி (சுந்)

இந்திரசேனன்-தரு.

நெஞ்சதுபோலேஉந்தன்மனம் நேர்ந்ததினலே
வஞ்சியேயுந்தன் வழியில்பெண்பார்த்துவா
கொஞ்சியேமைந்தன் குலாவமணஞ்செய்வோம் (நெஞ்)

மங்கைநாயகி.கொச்சகம்.

மைந்தனுக்கு எந்தநிடவழியில் பெண்பாருமென்ற
சுந்திரனே என்கணவா சூசித்திரவர்மன்மகள்
அந்தமுள்ள ஸ்ரீமந்தனியானதை நாம்போய்கேட்டு
சந்திருங்கதன்மகிழ தக்கமணம் செய்வோமே.

வசனம்.

கேளும் இராஜபூபதியே என்னை வினவிகேட்டபடியால் என்னுடைய தமையன் சித்திரவர்மராஜன் குமாரத்தியாகிய ஸ்ரீமந்தனியிருப்பதால் நமது குமாரன் சந்திருங்கதனுக்கு மேகார்வையான மங்கைதான் ஆகையால் அதனையே விவாகம்முடித்துக்கொள்ளலாம் பிராணேசா.

இந்திரசேனன்-கவி.

வனக்குயிலானமாதே மங்கைநாயகியேமைந்தன்
தனக்குரிதான ஸ்ரீமந் தனியிருப்பதிஞலிந்த
தினத்தினிலேகவேண்டும் சீக்கிரமுடனேயேக
கனத்தரண்மனையைவிட்டு கன்னியேவருகுவாயே.

வசனம்.

கேளும்பெண்ணே மங்கைநாயகியே நீசொல்லியப்படியே சம்மதித்தேன் இன்று அமிர்தயோகங்கூடிய சுபதினமாகையால் நாமிருவரும் ரதமேறிக்கொண்டு ஆரியதேசம்போய் உன் தமையனராகிய சித்திரவர்ம மகாராஜனைக்கண்டு

ஸ்ரீமந்தனியை நமது குமாரனுக்காக கேழ்க்கவேண்டும் நீ துரிதத்தில் அலங்காரம் செய்துக்கொண்டு வருவாயடிமாதே.

சித்திரவர்மனும் மங்கைநாயகியும் ஆரியதேசம் போகுதல்

மங்கைநாயகி-தரு.

சித்திரவர்மன்தேசமேஎகுவோம் வாருய்மன்னுவாராய்—வெகு
சுத்தியானவழிதுடரும்பின்னல்வர நேராய்வழிநேராய்
அதிசூரர்கள்பணிபுஒய்யாரனே
பதியைவிட்டுவாரும்நீர்தீரனே (சித்)

இந்திரசேனன்—தரு.

கோகநகமுகமானவனக்குயிலாளே குயிலாளே—மகிழ்
வாகநடந்துவோரும்பின்னல் மயிலாளே மயிலாளே
வஞ்சியேறஞ்சிதபஞ்சவர்ன்னக்கிளி
கொஞ்சிடக்கூடிகுலாவுதுபாரடி (கோக)

மங்கைநாயகி—தரு.

கண்டதிசயமதுகொண்டுகளித்தேனன் மன்னுஒகோமன்ன—மதங்
கொண்டகரிகளிதோறண்டுங்குதிக்குது என்னுயிதுஎன்ன
கோறமுந்தீறமும்வீறமாங்காறமும்
சூறனேயினிவுயர்மீறவும்பேசுற (கண்)

இந்திரசேனன்-தரு.

எப்படிஎகலாமென்னு மங்கைநாயகியாளே நாயகியாளே—அதை
குப்புறவீழ்த்திடக்கொல்லுமென் கைவாளினலே—துயர்
கொண்டதைவிண்டிடுஅண்டிடலாகுமோ
கண்டவுடனேமுன்னில்தெண்டமிட்டோடுமே (எப்)

மங்கைநாயகி-தரு.

தாமரைப்பொய்கையும் கோபுரமதிலு மார்கேசம் இதார்தேசம்
மாமரையோர்வேதம்வாசிக்கிறரிது ஞாயம்இதுஞாயம்—இந்த
மன்னனர்யின்னகர்பொன்னகறென்னலாம்
உன்னியரிந்துரைகனனிகளித்திட (தா)

இந்திரசேனன்—தரு.

மானேசித்திரவர்ம்மனுர் சீமையிதுதானே இதுதானே—செந்
தேனேயிந்தவனந்தனிலே யிழிந்திடுவோமேயிழிவோமே—வந்த
சேதியைஆதியாய் ஓதியரிவர
மாதினைதந்திட தீதிலாதேருவோம் (மானே)

வசனம்.

என்பிராணபதமாய்யிராநின்ற மங்கைநாயகியே இந்த நந்தவனம் சித்திர வர்மராஜாவுடையது இதில்பரிமளமிகுந்த நருமலர்வாசம் வீசவிதுடன் மிகுந்த குளிர்ச்சியோடிருப்பதால் இதில் இழிந்து கூடாரமடித்திருந்தால் நமது மந்திரிகளால் உமது தமயனுர்வருவார் அவருடன் இந்த சுபகாரியங்களை கலந்து பேசிக்கொண்டு அவர் சம்மதித்தால் ஆரியதேசம்போவோம் பெண்யில்லையெ ன்ருல் நமதுநகரமாகிய நிடததேசம் போகலாமடி கண்மணி.

இந்திரசேனன் விருத்தம்.

அருமரையரிந்தாலோசித்தரிவிக்கும் மந்திரிமாரே
மருமலர்கமழும்நந்தவனத்தில் வந்துற்றசேதி
திருமகள்விலாசனுன சித்திரவர்ம்மன்பக்கல்
ஒருநொடிதனிலே யேகிஉரைத்துமேவருகுவீரே.

வசனம்.

மந்திரி நாம்நந்தவனத்தில் வந்திருப்பதாய் என் மைத்துனராகிய சித்திர வர்மராஜனுக்கு தெரிவிப்பீர் மந்திரிகளே.

மந்திரிகள் கவி.

உத்திரப்படியேமன்ன ஓடியேக்ஷணத்தில்நாங்கள்
சித்திரவர்மர்க்கோதி சீக்கிரம்வருகுவோமே

மந்திரிகள் சித்திரவர்மனைக்கண்டு சொல்லல்—கவி.

பொன்னகர்மன்னன்போலரசாளும்
மன்னவர்சித்திரவர்மனேசருணம்

வசனம்.

சருணம் சருணம் சித்திரவர்ம மகாராஜனே சருணம் சுவாமி.

சித்திரவர்மன் கவி.

வந்திடும்மந்திரிமார்களே வாழி
எந்தவூர்நீங்க ளியம்பிடுவீரே

வசனம்.

ஆசீர்வாதம் ஆசீர்வாதம் மந்திரிமார்களே நீங்கள் எந்தவூர் வந்தகாரிய மென்று சொல்லவேண்டும் மந்திரிமார்களே.

மந்திரிகள்-கவி.

பூதலம்தன்னில்மேன்மைபொருந்திய நிடததாட்டின்
நாதனுமிந்திரசேனன் நாயகியுடன்பூங்காவில்
சீதளவாடைகொள்ளும் சேதியையுமக்கோதென்றார்
ஆதலால்நாங்களிப்போ அறிவிக்கவந்தோமன்று

வசனம்.

அரசே நிடததேசத்தை பரிபாலினம்செய்யும் இந்திரஜேனமகாராஜன் எதோசுபசேதியின் காரணமாய் உமது நந்தவனத்தில் வந்திருக்கிறார் அதைதங்களுக்கு தெரிவிக்கசொன்னார் வேந்தே.

சித்திரவர்மன் சொல்வது கவி.

புண்ணியமென்னசெய்தேன் பூர்வசம்மந்திபிந்திரன்
எண்ணியெந்தனையேநாடி யிருண்டபூஞ்சோலைதன்னில்
நண்ணியப்படியால்மந்திரி நாமனைவோரும்சென்று
கண்ணினால்காணவேண்டும் கர்தலாய்வருகுவீரே.

சித்திரவர்மன் இந்திரசேனனைப் பார்த்து

சொல்வது—கவி.

அத்தானேவாருவாரும் அருமைசோதரியேவாரும்
இத்திசைநாடிவந்து என்னகத்தினில்வாராமல்
மெத்தவும்பசியால்நொந்து விடாவுடனிருக்கலாமோ
உத்தசேதியைநன்றாக ஓதுவீரரியத்தானே

வசனம்.

ஓய் அத்தான் வாருவாரும் என் அருமைதங்கையே வாருமம்மா நீங்கள்

என்னை நாடிவந்து என் மாளிகைக்குவராமல் இந்த சோலையில் வந்திரங்கிய காரணமென்ன அதனை ஒளியாமல் சொல்லவேண்டும் மைத்துனா.

இந்திரசேனனுக்கும் சித்திரவர்மனுக்கும் தர்க்கம்

இந்திரசேனன்—தரு.

மைத்துனரேசித்திரவர்ம்மா   உன்னிடவந்த
மார்க்கமதைதீர்க்கமாய்கேள்   யானுரைப்பதை
புத்திரன்சந்திராங்கதனுக்கு   மணமுடிக்க—உந்தன்
பொற்கொடிஸ்ரீமந்தனியை   தந்திடுவாய்   (மை)

சித்திரவர்மன்—தரு.

தந்திடத்தடைகளென்னகுலங்கோத்திரம்
சாதியரிந்திடவேணுமா மனதைப்போல
அங்கணமல்கயர்பொருத்தம் கணபொருத்தம்
ஆய்ந்துதெரிந்திடுவீர் பேதகமென்ன   (தந்)

இந்திரசேனன்—தரு.

இருவருக்கொருகணமே   பொருத்தம்நன்றாய்
இருக்குதென்றார்மரையோர்   அரிந்துவந்தேனே
வருவழியிலேசகுணம்   குரவில்லாமல்
வாய்த்ததுன்மகள்தனக்கே   யோசிக்கவேண்டாம்   (இரு)

சித்திரவர்மன்—தரு.

ஆனால்சந்திராங்கதனை   என்னிடத்தில்
அழைத்துமுகூர்த்தம்   செய்வீர்புகழுடனே
மானார்விழிஎன்   தங்கையாரேயம்மா
மனதில்சஞ்சல   மொன்றுவையாதே   (ஆனா)

சித்திரவர்மன்—வசனம்.

அகோ கேளும் மாமாவே என்குமாரத்திபோல் சிலாஞ்சை நிலங்களை இரையம் செய்திருக்கிறேன் தங்கள் குமாரனுக்கு விவாகம் செய்துக்கொண்டால் அதனை நானே சாகுபடிசெய்து வருஷந்தவராமல் அனுப்புவதுடன் [illegible] கையே சீதனம்தருகிறேன் மைத்துனா.

இந்திரசேனனுக்கும் சித்திரவர்மனுக்கும் தர்க்கம்.

இந்திரசேனன்—தரு.

பெண்ணைநான்மணம்செய்துக்கொண்டாலே மகனுக்குகொண்டாலே இந்த
பேச்சைமரந்துநீர்புவிமேலே ஓஹோ ஒருக்காலே
இண்ணூ உங்களுக்கென்னுயிருக்கு உங்கள்சொத்தை
தின்னுவந்தால்அந்திபத்தில் சீதனம்தருவேனென்பீர் (பெண்)

வசனம்.

அஹோகேளும் மைத்துனு உமது குமாரத்தியின்பேரில் சிலநஞ்சை சிலங்களை கிரையம்செய்து வைத்ததாய் தெரிவித்தீர் அக்கரைதீர்ந்தால் அக்கா மகள் கொக்கென்பதைப்போல் நினைந்து இப்போது உங்களுக்கென்னகுறை உங்கள் கையிலிருக்கும்சொத்தை சாப்பிட்டுவந்தால் எனக்கு கடைசியில் சீதனம்தருவேனென்பீர் இந்தகேவல சொத்துதானே உம்முடையது மைத்துனு

சித்திரவர்மன்—தரு.

தருகலைக்குப்பிரந்தமடையன் ஹீனமடையன்—சொல்லை
தப்பிஎமாத்துவான்நடையன் சாதிக்கடையன்
அருமைகமனுக்கதை ஆஸ்த்தியாய்வைத்தாலே
வருகாபெருவியாதி வந்துமேசாவானே

வசனம்.

கேளும் அந்தான் அவ்விதம்செய்பவன் கொடியசண்டாளனுக்குப்பிரந்த கேவல அரிஹீனனும் ஓர் கண்ணில் வெண்ணையும் ஓர் கணணில் சுண்ணாம்பு தடவுங்குண குடையவனும் அவ்விதப்பிரபு மருமகனை வஞ்சித்து தன் அருமைமகளுக்கு அந்த சொத்தை நிலைநிருத்த எண்ணங்கொண்டால் அந்தமகன் யாவரும் இகழும்தொழிலிபாதிகண்டு திட்டென மரணமடைவான் சத்தியம் சத்தியம் பரமேஸ்பரிபேரில் ஆணைப்படி சொன்னேன் மாமா.

இந்திரசேனன்—தரு.

வானேமுலகமீதில்இப்படி சொன்னசொற்படி—தம்பி
வகைமோசம்போனூர் சிலர்எப்படிநம்புவேன் நற்படி
தானேதன்மனைவியை தன்மத்துப்பொருள்கேட்டால்
மானேஎன்மகளேயென் மனைகளுவாவென்பீரே (வானே)

வசனம்.

கேளும்மைத்துனா இவ்விதம்சொல்லிய நயவார்த்தைகளைக்கேட்டு உலகத்தில் எத்தனையோபேர் மோசம்போனார்கள் அதுவன்றியும் புருஷன் பெண்ஜாதியைக்கண்டித்து உன்பேரால்வைத்த நஞ்சைநிலங்களில் விளையும் நெல்களை வாங்கிவாவென்றுகூறினால்அவ்வார்த்தையைநீர்கேட்டமாத்திரத்தில்வெட்கமில்லாமல் உமது மகளை புருஷன்வீட்டில் என்னவேலை என் வீட்டுக்குவாவென்று அழைப்பீர் மைத்துனா.

சித்திரவர்மன்—தரு.

மகள்மேல்வைத்தசொத்தைக்கண்ணாலே கடைக்கண்ணாலே-பார்த்தால்
மயிர்கூடஅவன்வாழ்வுநில்லாதே சத்தியமாய் நில்லாதே
பூஜகத்தில்வேதசாஸ்த்திரம் செப்புமுறையைப்போலே
பகருவார்பெரியோர்கள் பண்பாய்கேட்டிருப்பேன் (மக)

வசனம்.

மகள்மேல்வைத்தசொத்தை கடைக்கண்ணாலும் பார்க்கக்கூடாதென்று வேதசாஸ்த்திரம் முறையிடுவதாய் பெரியோர்கள் கூறுவார்கள் அஃதன்றியும் இன்றையதினம் சாப்பிடும் விளாக்காயும் நாளைய பிலாக்காயும் சுமமல்ல மனிதர் நாளைக்கிருப்பது நிச்சயமல்ல நான் அவ்விதம் செய்யமாட்டேன் அவ்விதம்செய்தால் அவன் மாளிகை கோடையிடிவீழ்ந்து குட்டிச்சுவராகி அவன் சொத்து நாளுக்குநாள் அழிந்து அவன சந்ததி திட்டுதிட்டென்று வீழ்ந்து மரணமடையும் மைத்துனா.

சித்திரவர்மன்—வசனம்.

அவ்விதமே சம்மதித்தேன் உமது குமாரனை அழைத்துவாரும் மைத்துனா.

இந்திரசேனன்—கவி.

படபடவெனவேபரந்துதூதரே
நிடதமாம்புரியை நீங்களும்சென்று
தடவரைபுய சந்திராங்கதன் தன்னை
மடமடன்றிவகே வரவழைப்பீரே.

வசனம்.

அடேதூதுவர்களே நமது நகரமாகிய நிடததேசம்சென்று என் குமாரனாகிய சந்திராங்கதனை அழைத்தோடிவாருங்கள்.

சந்திருங்கதன் வருவது—கவி.

தந்தைதாயாரைக்காண சந்திராங்கதனெழுந்து
விந்தையாய்பணிகள்பூண்டு வெண்மதிமுகந்துலங்க
கந்தரைப்போல்வேலேந்தி காலினில்சதங்கைகொஞ்ச
சொந்ததன்மனையைவிட்டு துரிதமாய்வருகின்றானே.

தரு.

தந்தையிந்திரன் தூதர் வந்துரைத்திடவே
சந்திருங்கதராஜன்வந்தேன் பரிவாகநடந்து சங்
அந்தரத்தோர்கொண்டாடும் ஆரியவர்த்தனநாட்டில்
தொந்தநிடதாபுரி விந்தையாய்கடந்தோடி

சுரு-துண்டவீறர்கள் அண்டிடாமல்பூ
மண்டலங்கெடிகொண்டபாலனும் (தந்)

மாதப்புறமயில்கள்கூவுவனங்கடந்து
பாதகபுரிசிங்கம்தீதகலநடந்து

சுரு-பள்ளமேடுநீறுள்ளசைவல
மள்ளிதள்ளியேதுள்ளிநீந்தியே (தந்)

அன்னாருயேர்சனே முன்னிருந்திட அரை
மின்னிட்டிலேகிட விருதுவழியேதுரை

சரு-வெங்கதிர் கிரணங்களில்நல்ல
அங்கவெந்திட தங்கிடாமலே (தந்)

ஜெயமணிபூண்டமாமன் சித்திரகொலுகூடமும்
வயலுமந்தியும்றத்தின மமைத்தபொற்பீடமும்

சரு-வந்துகண்ணில்கண் டிந்திருயமென
அந்தநாளிலரிந்திடலாமெனெ (தந்)

சந்திராங்கதன் தந்தையைபோற்றுதல்—கவி.

அன்னை தந்தையரேயுங்கள் அடியினைபோற்றிகேளீர்
என்னையேன் தூதருலே யிவ்விடவரவழைத்தீர்.

வசனம்.

வந்தனம் வந்தனம் அன்னை தந்தையர்களே என்னை அழைத்த சேதியை க்கூருவீர் தந்தையே.

இந்திரசேனன்-மங்கைநாயகி-கவி.

பொன்னேகண்மணியே எங்கள்புத்திரனேவாழிமாமா
கன்னியைமணஞ்செய்விக்க கருத்தென்னஉரைத்திடாயே

வசனம்.

கேட்டாய் எங்கள் தபக்குமாரனாகிய சந்திராங்கதனே நீ பெருங்கருணைக்கடலாகிய சாக்ஷாதி சிவபெருமான் திருவருளினால் மகாராஜனாய் தீர்க்காயிசுபெற்றுவாழ்வாய் எழுந்துநில்லு உன்னை அழைத்தசேதிஉன் மாமன் சித்திரவர்ம மகாராஜன் குமாரத்தி ஸ்ரீமந்தனியை உனக்கு விவாகம்செய்துவைக்க அழைத்தேன் உன்கருத்தென்ன மகனே?

சந்திராங்கதன்—கவி.

மருமொழியென்ன வகுத்துரைசெய்வேன்
திருக்கலியாணம் செய்திடுவீரே.

சித்திரவர்மன்-கவி.

என்றுமென்பக்கலிருக்குமந்தணரே
நன்றுகாளொன்றுநவின்றிடுவீரே.

வசனம்.

பிராமணோத்தமர்களே என்மகள் ஸ்ரீமந்தனிக்கு திருக்கல்யாணம்செய்ய முகூர்த்தநாள்பார்த்து சொல்லுங்கள் சுவாமிகளே.

பிராமணர்-கவி.

இந்தநாள் நன்றாயிருப்பதாலுந்தன்
சந்திஸ்ரீமந்தியை சடுதியிலழைப்பீர்.

வசனம்.

மகாராஜனே இன்றையதினமே சுபதினமாகையால் உமது குமாரத்திக்கு திருமணம்செய்ய உத்தமமாய் யிருக்கிறதுவேந்தே.

சந்திராங்கதனுக்கும்-ஸ்ரீமந்தனிக்கும்
கலியாணம் செய்தல்.

சொண்டிச்சிந்து-தரு.

மங்களம்மங்களமே சந்திராங்கதனும் ஸ்ரீமந்தனிக்கும்—மங்
கல்லாணம்கல்யாணம் சந்திராங்கர்க்கும் ஸ்ரீமந்தனிக்கும்—கல்
எல்லோருந்தாரியஜெயபேரிகை எங்குமமரையவை குதெரியவைத்தார்
கும்பிட்டுகுலதெய்வத்தைபல கோவில்கள்தோருமபிஷேகம்செய்தார்
கம்பத்தூண்வச்சிரத்தால்நிருத்தி கணக்கில்லாறத்தினங்கள்மேல்பரப்பி

வாழைமரம்பிளந்து தெருவெங்கும் வைடூரிய பந்தல் பந்தல் அலங்கரித்தார்
தாழ்வில்லாருந்தல்களும்கூலோப்புடனே சாஞ்சரமாகவே திரைந்திவைத்தார்
சாந்தால்தரைமெழுகிகோலமிட்டு சாங்கிப்படு விளக்கேற்றிவைத்தார்
கூந்தமுழுகிபர்கள்சாலுங்கறகம் கொண்டுவந்தராணிகால்புதைத்தார்
கங்கணங்காப்புகட்டியிருவர்க்கும் கன்னிபாகூடிநலங்குவைத்தார்
எவரும்விலைமதியாதங்கப்பணிகள் யிருவருக்குமங்கே அலங்கரித்தார்
சென்னலமுதெடுத்து சீர்பெற செங்கதிரோன் பொங்கலிட்டார்கள்
சைந்தன்சந்திராங்கதனும்ஸ்ரீமந்தனியும் மணவரையேறிகளிப்புடனே
கூப்பிநிநகரமுற்றதிமன்மதன்போலே விநாயகனைதோத்தரித்து
மாப்பிள்ளைபும்பெண்ணுடனேபந்தலில் மணவரையேறிமாமறையோர்
தன்னிலம்பாப்பிவைத்து இந்திரமுகமாய் சாஸ்த்திரப்படி ஓமதீவளர்த்தி
பண்டாகமப்படியே வேதகோஷ்டம்பாடியே மந்திரங்களுச்சரித்து
லக்குணம்போகுதென்று எழுந்திருந்துநான் மறையோர்அவசரமுடனே
பக்குவமுடனே பந்தமங்கிலியம் பரிவுடன்யாவரும்வாழ்த்திடவே
சிவசிவாவென்றவரும்நினைந்து ஸ்ரீமந்தனியைமாலைசூட்டினரே
அவரவருள்ளமதில் சந்தோஷமாய் அள்ளியேசேஷை யிரைத்தார்கள்
அம்மிமிதித்தார்கள்யிருவரும் அரசாணிசுத்தியருந்ததியைக்கண்டார்
சம்ரமாய்கோலவந்தார்காப்புக்களைந்தார் தந்தைதாயேகமருவுண்டிருந்தார்
மங்களம்.

பொதுவசனம்.

இவ்விதமாகத்தானே ஸ்ரீமந்தனிக்கும் சந்திராங்கதனுச்கும் திருக்கல்யாணஞ்செய்துவிட்டு இந்திரசேனனும் மங்கைநாயகி முதலானவரும் தம்தம் இஸ்தானம்போய்விட சந்திராங்கதன் மாமனார்வீட்டில் மருவுண்டிருக்கையில் ஓர்நாள் ஓர்நினைவுதோன்றி சொல்வதுகாண்க.

சந்திராங்கதன்—கவி.

திருக்கல்யாணம்செய்து சிலதுநாள்மருவுமுண்டு
இருக்குமன்றுள்வனத்திலேகிவேடிக்கைபார்க்க
உருக்கமாயெண்ணிதோழருடன் ஸ்ரீமந்தனியின்முன்னே
கருத்துடன்வந்துநின்று துரையவனுரைசெய்வானே.
சந்திராங்கதனுக்கும் ஸ்ரீமந்தனிக்கும் தர்க்கம்

சந்திராங்கதன்—தரு.

தேவியேபிராணஆவியே
கானகத்திலதிசயம் கண்டறியமோழுடன்
கருதியேவந்தேனுறுதியே
சரு-காணமலேதலேகாணுவதழகல்ல
வேணபகடைவிளையாடியேவருகுறேன் (தே)

ஸ்ரீமந்தனி-தரு

செங்கரும்பேமன்மதரே செப்புச்சிலேயேதனியாய்
செல்லவேஞாயமல்லவே
மங்கையருந்தங்கள்பின்றல் வந்திடக்கண்பாரும்
ரதிமாரனே ஒய்யாரனே
சரு-வாடியான்வாய்மூடியுந்தனே
தேடியுபசரித்தோடிவருகுறேன் (செ)

வசனம்.

அகோகேளும் பிராணேசா என்னை தனிமேயவிட்டுவிட்டு ஆரண்யமாகிய காட்டுக்குச்சென்று வேட்டையாடபோறதழகல்ல அடியாளுங்கூடவே வருகுறேன் நாதா.

சந்திராங்கதன்-வசனம்.

கேளும்பெண்ணே ஸ்ரீமந்தனியே புருஷர்கள் வேட்டையாட கானகம் போவது வழக்கம் ஸ்ரீஜாதிகள் வரலொண்ணாதடி கண்மணி.

ஸ்ரீமந்தனி-கவி.

கானகம்போறேனென்ற கந்தவேள்சிகர்த்தமன்னு
தீனமன்மதனுமென்மேல் திட்டெனமலர்பாணத்தை.
சோனமல்மாரிபோலே சொரிந்துயிர்வாட்டுகின்றான்
மானவேல்கையிலேந்தும் மன்னவாசேறவாருய்

வசனம்.

நாதா நீர்கானகம்போகிறேனென சொல்லுமுன் மதப்பயல் மலர்வாளி கொண்டெய்குறான் என்றால் தாமசவகையில்லை இவ்வேளை சேரவாருமன் மதா.

சந்திராங்கதன்-ரொண்டிச்சிந்து.

ஆகாசீமந்தனியே (எதிர்நின்று) அடுக்காதவார்த்தை சொன்னாய் மூடக்குடனேபெண்கள் வேட்டையாடுவதுண்டோ சீச்சீ பேதைமதியாலேயிப்போ வாதிக்கிறாய் பெண்போகம்செய்துவிட்டு போனால் பெற்ற பொருள்தனையை விட்டுஅற்றுவிழுமே எவ்விதமூடர்களும் நீசொல்லுவிதம் எந்திழையேநடப்பாரோ ஏகடியில்லலம் தந்தோம் தனதனனா.

வசனம்.

கேளும்பெண்ணே ஸ்ரீமந்தனி எவ்விதமூடனாயிருந்தாலும் ஸ்ரீபோகம் செய்துவிட்டு ஓர்காரியத்தை நாடிபோவானேயாகில் அந்தகாரியம் கைகூடினாலும் தவறிவிடும் ஆகையால் நீ மாளிகைக்கு போவாயடி பெண்ணே.

ஸ்ரீமந்தனிக்கும்-சந்திருங்கதனுக்கும் தர்க்கம்.

ஸ்ரீமந்தனி—தரு.

வாவாயெனதுமன்னவா மங்கையைச்சேர வாவா
தேவாயிதுசமயம் தேங்கிகாமத்தால்வாடும்
தேவிபெணக்குசகம் மேவிமேவியளித்திடுவீர்

மோடிஎந்தனுடனே சாமிநீர்செய்யப்போமோ
வாடிதவிக்கிறேனே யீடில்லாருஜநீரு (வா)

சந்திராங்கதன்-தரு

வாடிதவிக்கும்வஞ்சியே கானகம்செல்ல—வாடி
மோடிசெய்தாலிவ்வேளை முடியாதுந்தனைச்சேர
முல்லைநகையினுளே நல்லபகலாச்சுதே
முத்தேஉனதுகாமம் சற்றேபொருத்திரடி
எத்தேசகாலமுனுன் ஒத்தேயணைகுறண்டி (வாடி)

ஸ்ரீமந்தனி—தரு.

ஒத்தணைகுவோம்துரையே யிருவரும்—ஒத்
சித்தமகிழ்ந்திப்போ மெத்தைமீதினிலோடி
சிருய்நடேசதாசன் கவிதனையே பாடி
மன்னுஉன்கைபிடிததேன் என்னுபதில்சொல்லுருய்
இன்னந்தாமமேனே கன்னிஞன்தானேன்வாடா (ஒத்)

சந்திருங்கதன்-தரு.

கன்னிஸ்ரீமந்தனியே கலங்காதே—கன்
உன்னைவிட்டுவேர்பெண்ணை உலகத்தில்கூடுவேனே
என்னபுத்திபடைத்தாய் அன்னமே மடமானே
ஏதுயெனைதடுத்து வாதுசெய்குருயடி
நீதுவருஉனக்கு மாதேயனுப்படி நீ (கன்)

ஸ்ரீமந்தனி-வசனம்.

பிராணநாதா என்னைமணஞ்செய்து மூன்றுமாதம்கூட ஆகவில்லையே உம்முடையசுகத்தை குரைவர உண்டுமிழ்ந்தனில்லவே உம்மைவிட்டு அரை நிமிஷமாகிலும் பிரியமனவரவில்லையே என்னசெய்குவேன் உம்மைப்பிரிந்தால் உயிர்நில்லாது மன்மதா.

ஸ்ரீமந்தனிக்கும்—சந்திருங்கதனுக்கும் தர்க்கம்.

சந்திருங்கதன்-தரு.

கன்னி ஸ்ரீமந்தனியாளே—காம

மீரிவந்தாய் குயிலாளே
அன்னமே நீயிந்நாளே—என்னே
அணிப்பிணைத்தால் மயிலாளே
பொன்னேபூஷணமே போய்வந்தபின்னாளே
என்னேரமும்உந்தன்யிஷ்டம்போலிருக்குறேன் (கண்)

ஸ்ரீமந்தனி-தரு.

செய்யமாரு திருவாரும்—உந்தன்
தேவியாமென்முகம்பாரும்
ஐயையே காமனும் யென்மேல்—கணை
அளவின்றியெய்குருன் நேரும்
ஜெயயோகம்செய்ய சமயமிதுதானே
தையலினிமையல்தாளே என்செய்வேனே (செய்)

சந்திராங்கதன்—தரு.

என்னருங்கண்ணேமணியே சீச்சீ
ஏங்காதே நீ மனந்துணியே
உன்னருவாய்திரந்தினியே பேசி
ஓகோமுத்தந்தர கனியே
பன்னகுஞ்செந்தேனே பத்தியிழுக்குருய்
கன்னியர்க்கிவ்விதகாமமிருக்குதோ (என்)

ஸ்ரீமந்தனி-தரு.

காமத்தின் ஆசையைவிட்டு பொல்லா
கானகம்போகவேதொட்டு
ஏமனைப்போல்தள்ளிவிட்டு நீரும்
ஏசலாமோமதிகெட்டு
சோமன்கீர்த்தஜய் சுந்திரமன்னவா
தாமதம்செய்யாமல் தையலைச்சேருவாய் (காம)

வசனம்.

என் ஆசைக்கிசைந்த அருமைகண்ணாளா என்னை தானியேவிட்டுபோவது சரியல்ல அடியாளுங்கூடவே வருகிறேன் சுவாமி.

சந்திராங்கதன்-வசனம்.

கேளும் ஸ்ரீமந்தனியே! கானகம்பார்க்க இச்சைவைத்தபடியால் என்னுடன்கூடவாரும் பெண்ணே ஸ்ரீமந்தனி.

சந்திராங்கதனும்—ஸ்ரீமந்தனியும்

காட்டுக்குப்போகுதல்.

சந்திராங்கதன்-தரு

வாரும்பெண்ணே சான்றோர்கள் வாழ்ந்திடும்சிங்காரவீதி
வந்தரி எந்தன் சுந்தரி
பாரும்பிர்ம்மணவசியர்கள் பாவையே தேவதாசிதெரு
பஞ்சமேயில்லை கொஞ்சமே
பகருசோதிடங்களில் நிகரிலாதவர்
அகமிருகண்களால் சுகமுடன்பாரும் (வாரு)

ஸ்ரீமந்தனி-தரு.

சோமனவைடூரியமே குத்தமில்லாரத்தினமே
கூடுறோர் விளையாடுறோர்
தாமதங்களாகாமுன்னே தாண்டிநடப்பீர்மெலிந்தேன்
தையல்நான் உக்கிர வெய்யலால்

தருவடர்ந்திடும்பருவதங்களும்
உருவுமறியவே தெரியவுமில்லையே (சோ)

சந்திருங்கதன்-தரு.

கஞ்சமலர் ரஞ்சிதமே கொஞ்சியவனமிதுவே
காடெல்லாம் விளையாடலாம்
சஞ்சலங்களில்லைமானே குஞ்சரம்பத்திப்பத்தியாய்
சாயுதே எதிரி பாயுதே
தவமுனிரிஷிகளும் விபரீதமாகவே
சிவதபசெய்குரூர் உடதேசபெருகலாம் (கஞ்)

ஸ்ரீமந்தனி-தரு.

கண்ணிரைந்தபூஷணமே கற்கண்டே மணிவிளக்கே
கண்டேனே ஆனந்தங் கொண்டேனே
புண்ணியா பொழுதுமேற்கில் போச்சுது நாமிருந்திட
போகாதே நல்ல தகாதே
பூமேல் கல்லோடுகள் மேடுகள் காலினில்
சாடியேவாடுறேன் வீடுகள்போகலாம் (கண்)

வசனம்.

கேளும்பிராணேசா நான் எண்ணங்கொண்டபடியே கானகத்திலுள்ள அதிசயங்களை காண்பித்தீர் அடியாளும் அதனை ஆவலுடன் பார்த்தானந்த மடைந்தேன் இதுதருவடர்ந்து யிருள்சூழ்ந்த கானகபாகையால் மிருகஜாதிகள் கூட்டங்கூட்டமாய் நடமாடுகுறது ஆதித்தனெனிய சூரியனும் மேற்குதிசை நாடி செல்வதால் நாம் பொழுதுபோகாமுன் நமது மாளிகைக்கு போவோம் வாரும் அரசே.

சந்திருங்கதன்-கவி.

சித்திடைமாதே தங்கச்சிலைபருவான பெண்ணே
புத்தியும்சிதறவேண்டாம் பொழுதுமேற்காகுலென்று
தத்திபபழனையாற்றை தாண்டிகண்டரிந்துவாரேன்
புத்தி [illegible] மேனேபாலையையே யிருந்திடாயே.

வசனம்.

கேளும் [illegible] பொழுதுபோகுமென்று நீ அதற்காக சஞ்சலப்பட்டவேண்டாம் [illegible]

படவேரிக்கொண்டுபோய் அக்கரைகடந்து மறுபடியும் உன்னைபிட்டுக்கொண்டு போகிறேன் இவ்விடத்தில் தானேயிரும் பெண்ணே ஸ்ரீமந்தனியே.

சந்திரங்கதனுக்கும்—ஸ்ரீமந்தனிக்கும்-தர்க்கம்.

ஸ்ரீமந்தனி-தரு.

நல்லவசனம் சொன்னீர் மன்னா ஓகோ மன்னா—இந்த
ஞாயமடுக்காதுரைத்ததென்னா உரைத்ததென்னா
சொல்லும்படவிவேரி செல்லுவதுதகல்ல
துதிக்கிறீர்பெரு ஆபத்திருக்குதென்றறியாமல் (நல்)

சந்திரங்கதன்-தரு.

ஆபத்தெங்குவிளையாதா விளையாதா—இதை
அரியாமல்பேசுராய் வாதா யிதென்னவாதா
போப்போபயித்தியங் கொண்டுபினத்துராய்
பூத்தானவார்த்தைகள் னத்திபே மாததுராய் (ஆப)

ஸ்ரீமந்தனி—தரு.

தாருகன் தண்டகாசூரன் இரண்யாசூரன் பத்து
தலைராவணன் வாலிதீரன் அதிசூரன்
ஆருமீடில்லையென்ற அகத்தாலழிந்தார்கள்
அய்யோ கெங்கையைவெல்ல ஆராலுமுடியாதே (தாரு)

சந்திரங்கதன்-தரு.

நீருழுங்காணலாம்மாதே அடிமாதே—பெண்கள்
நெஞ்சாழங்காணப் போகாதே முடியாதே
சூரியச்சந்திரமதி போய்வட்க்கானாலும்
புவிகீழ்மேலானாலும் போகாதிருப்பனோனன் (நீரு)

ஸ்ரீமந்தனி—தரு.

படவுமீதேறானன் கண்டேன் கினவுகண்டேன்—நடு
பாதியில்கவிழ்ந்துயிர்கொண்டேன் துயர்கொண்டேன்
விடதமன்னாசரசி நெரிந்துனநந்தருந்திட
லெத்தில்புறண்டழுதுவிழித்தேன் கினவாய்ப்போச்சே படவு

சந்திரூங்கதன்-தரு.

பொல்லாக்கினவுகண்டாய் மானேபசுந்தேனே—அதை
போய்கண்டரிந்துவாரேன் நானே யினி தானே
நில்லாதேதிரென்றும் சொல்லாதே கோபங்கள்
நேரிடுதேப் படவேரிடப்போகிறேன் (பொல்]

வசனம்.

அடிவாடி ஸ்ரீமந்தனியே நான் படவேரிபோவது நிச்சயம் நான் எந்த காலத்தும் எவ்வார்த்தை சொன்னாலும் அடிக்கடிதடுத்து கூருகிருய் கற்புடைய ஸ்ரீகட்கு அழகாயோ கண்மணியே.

ஸ்ரீமந்தனி—கவி.

சொல்லதைதடுத்துமீரி தோழர்களுடனேகூடி
நில்லுமென்றெனைநிருத்தி நீய்ந்திடும்படவிலேரி
செல்லுமென்பிராணநாதா திருவிளச்செயலினாலே
அல்லலில்லாமல் நீங்களனைவரும்வருகுவீரே.

வசனம்.

வாரும் கண்ணாளா உமது வார்த்தைக்கு தடுத்து கூருவது கற்புடைய ஸ்ரீகட்கழகல்ல ஆகையால் திருவிளச்செயல்படியே நடக்கட்டும் நானென்ன செய்வேன் நீர் தோழர்களுடன் கூடிக்கொண்டுபோய் ஆற்றைக்கடந்து சீக்கிரத்தில் வாரும்நாதா.

85833

சந்திரூங்கதன்-கவி.

அரிகினில் சூழ்ந்திருக்கும் அமைச்சரேதோழமாரே
நெரியுள்ளஎனதுதேவி நிகரிலாவிடையுமபெற்றேன்
துரிதமாய்சென்றுநீங்கள் தோணியும்கொண்டு
பரிவுடன்யேறியாற்றில் பக்ஷமாய்விடுகுவோமே.

வசனம்.

அகோகேளும் தோழமார்களே நீங்கள்சென்று ஒரு ஓடக்காரனையிட்டு வந்தால் அந்தப்படவிலேரிக்கொண்டு விளையாடி அக்கரைசேர்ந்துவருவோம் மந்திரிமார்களே.

பொது வசனம்.

அகோதெப்படி என்றால் சந்திருங்கதருஜன் ஸ்ரீமந்தனியிடம் விடை பெற்றுக்கொண்டு தோழர்கள் ஓடக்காரனை அழைத்துவர அக்காலத்தில் அனைவரும் ஓடமேரிக்கொண்டு யமுனையாற்றில் போகுறவிதம் காண்க.

சந்திருங்கதன்—ஓடமேரிக்கொண்டு போகுதல்.

கலிப்பா தரு.

அனைவரும்படவேரினோம் தோழரே
யமுனையாற்றைக்கடந்தக்கரைசேருவோம்
நினைவில்நாமும் நினைந்திடுமெண்ணம்போல்
நேயரேவிளையாடியேவருகுவோம்
சுருள்-கிர்க்குரீர் ஒருபக்கமாகவே—ஞியாய
மல்லஅபாயமாச்சுதே தர்க்கம்மென்னடா தண்
ணிதன்னிலே ஜாடுதேபடவோடிடாமலே-தெ
ர்க்கினில்சுழல் மடுவுங்காணுதே—செப்பினே
ன்வழிதப்பிபோகுதே கற்கள்போலலைவந்
துமோதுது கையுங்காலு மசைந்துபோகுதே
சொற்பமாய்கினைந்தேகி வந்தேனே—தூற்
றியேபெறுங்காற்றடிக்குதே—பற்பலவித

மாகஎன்னிட பாரிசொல்லனன்மீரிவங்
தேனே கெற்பமுங்கலங்கிடுதேஎன்னிட
கெடிதிகாலமோபடவுசாயுதே கிர்க்கவும்பயங்கரமு
மாகுதே நினவெலாம் கினவாகபோகுதே—(அணே)

சங்கருசிவ சம்போமகாதேவா
சத்தியையிடவைத்த மகானுபாவா
பொங்கரவணிதிங்கள் சடையோனே
பூதனுதாபுரமூன்றெரித்தவா

சுரு-புகழுநான்மறைமீதெழுந்தவா-புவியில
ன்பரைகார்க்கவந்தவா-திகழுமாலயன்
தேடும்நாதனே-தில்லைகாளியோடாடும்
பாதனெ-கண்ணினல் மதன்தனேயெறித்தவா
கத்திவரும்புலிதோலுரித்தவா-குண்ணெ
டுத்துவில்லாய்பிடித்தவா-கூருசுந்திரர்
மணந்தடுத்தவா-வேடனெச்சியையுண்டவா
யனே-மேண்டுநந்தனேசேர்த்தநேயனே
பிட்டுக்காகவேமண்சுமந்தவா-பிரம்
படிகல்லடியும்பட்டவா-பொங்குங்
கடல்விஷந்தன்னேயுண்டவா-பூரிப்பா
ய்படவேரிவந்தேனே-படவுந்தண்ணியி
லமுங்கிபோகுதேபாதுகார்க்கவே வே
ண்டுமீசனே (அணே)

சந்திராங்கதன்—கவி.

அடித்திடுங்காற்றினலே அலைதலைபோலேமோத
நொடிந்துவீழ்படவமுந்த நுரையதுமேலேவீச
துடித்துயிர்போகாமுன்னம் தோகையோடுரைப்போமென்று
பிடித்திடுங்கிலியால்மன்னன் பெண்ணென்று அலருவானே

பொது-வசனம்.

அகோதெப்படி என்றல் சந்திருங்கத மகாருஜன் தெய்வச்செயலால் பெருங்காற்றடித்து ஓடம் கவிழ்ந்து தண்ணியில் அழுந்துதல்கண்டு நமது உயிர்போவது நிச்சயமென்றெண்ணி உயிர்த்துணேவியாகிய ஸ்ரீமந்தனியைப் பார்த்து சொல்வது காண்க.

சந்திருங்கதனுக்கும்—ஸ்ரீமந்தனிக்கும்
தர்க்கம்-சந்திருங்கதன்-தரு.

என்னசந்தோஷமாய்எரினேன்தோணியில் பெண்மயிலே-ஓடம்
ஏகும்போது அலைஎடுத்து அடிக்குதடி பெண்மயிலே

ஸ்ரீமந்தனி-தரு.

மன்னவாநின்று மயங்கவேண்டாமங்கே பிராணநாதாசென்ற
மார்க்கமாய்நீங்கள்வருகுவீர்தியங்காமல் பிராணநாதா

சந்திருங்கதன்-தரு.

பம்பரம்போலேபடவும் சுழலுதே பெண்மயிலே-இந்த
பாருள்வேனென்ற பக்ஷம்மரந்திடுபெண்மயிலே

ஸ்ரீமந்தனி-தரு

தெம்புக்குலைந்திட கும்பியெறிந்திட பிராணநாதா
தேங்குநீர்தெப்பம்திருப்ப முடியாமல் பிராணநாதா

சந்திராங்கதன்-தரு.

அரைமட்டந்தண்ணியில் அழிந்தியேபோச்சுதே பெண்மயிலே உந்தன்
ஆசையையமுனை ஆற்றில் ஒழிக்குறேன்பெண்மயிலே

ஸ்ரீமந்தனி-தரு.

துரையேஉம்மூடன்கூட தோகைநர்ன்வருகுறேன்பிராணநாதா - நான்
தொல்லுலகிலிருந்தால் அல்லல்படனேரும் பிராணநாதா

சந்திருங்கதன்-தரு.

கூடிவந்ததோழர் கூட்டங்குலைத்தேண்டி பெண்மயிலே- -நம்
குடுப்பனையிதேதிடுக்கென கவிழ்ந்ததுபெண்மயிலே

பொது வசனம்.

சந்திருங்கதன் யிரந்ததைக்கண்டு ஸ்ரீமந்தனிபுலம்புகுற விதம்காண்க.

ஸ்ரீமந்தனி புலம்பல்-தரு.

சேடியரேசித்திரவல்லி தெய்வம்சதிசெய்ததோடி
கூடிவந்தமன்னவனை கொன்றக்கூளியானேனேடி
பூக்கும்பிராயமாச்சே பிஞ்சிரங்குங்காலமரச்சே

காய்க்குமிந்தநாளையிலே கன்னிசிறையானேனேடி
கணவனில்லாமைங்கிலியம் கழுத்தில்பலனென்னடி
மணவன்தொட்டமைங்கிலியம் மங்கையாளறுத்தேனே
பாடகம்தண்டைகொலுசு பாரினிலெறிந்தேனேடி
கோடாலிமுடியவிழ்த்து கூந்தலைவிரித்தேனேடி
காலாழிபீலாழியெல்லாம் கழட்டிஎறிந்தேனேடி
நாலாவிதபூஷணமும் நானுவிட்டெறிந்தேனேடி
செங்கைவளயலுடைத்தேன் திலர்தப்பொட்டைக்கலைத்தேன்
கங்கணமுடைத்தேனேடி கால்சிலம்பெறிந்தேனேடி
தூக்கியடிவைக்கயிலே சுரட்டுமுள்ளுதைக்குதோடி
நீக்கியேநடப்போமென்றால் நினவுந்தடுமாறுதோடி
தந்தைசித்திரவர்மருக்கு தையலென்னசொல்வேனடி
நிந்தைக்காரிவந்தேனென்று நேரில்எவ்விதம்சொல்வேன்.

தாதிகள்-கவி.

தயங்கிடவேண்டாம் ஸ்ரீமந்தனியெனுமயிலேகேளாய்
நயந்தரும்சோமவாரம் நடத்தியப்படிகோரித்தால்
பயனொருநாளுமில்லை பத்தாவுவருவார்நம்பி
கயல்விழிமாதே யிந்தகானகவிட்டுவாருய்.

வசனம்.

கேளும் எங்களரசியாகிய ஸ்ரீமந்தனியே தாங்கள் எத்தனைகாலம் இவ்விடமிருந்து அழுதாலும் உமது நாயகன் வரப்போகுறதில்லை ஆனல் முன் நடத்திவந்த சோமவாரவிரதத்தை இப்பொழுதும் துவக்கி நடத்திவந்தால் உமது நாயகன் சிவபெருமான் திருவருளினல் வருவார் வீட்டுக்குவாருந் தாயே.

ஸ்ரீமந்தனி சித்திரவர்களைக்கண்டு நமஸ்கரித்தல்

தேவாரம்—பண்.

ஐயையோஎன்னசொல்வேன் அருமையுள்ளதந்தையரே
தெய்வம்சதிசெய்ததையோ தேங்கியழகாலமாச்சே
வையகத்தோர்தான் நகைக்கவந்ததையேதுர்க்காலம்
செய்யாததீவினைமுன் செய்தேனேகண்டிலேனே.

சித்திரவர்மன்-கவி

என்னடிசித்திரவல்லி யிந்தலங்கோலமாக
முன்னிலென்மகளுவீழ்ந்து மூர்ச்சித்து அழுவதென்ன
சொன்னதுண்டானலந்த துஷ்ட்டரையிழுத்துவந்து
சென்னியைகோய்வேனிப்போ சீக்கிரமாயுரைத்தீடிரே.

வசனம்.

கேளுங்கோள் தாதிமார்களே என் குமாரத்தி அலங்கோலமாய்ஓடிவந்து வீழ்ந்து அழுவதென்ன சொல்லவேண்டும் தாதிகளே.

தாதிகள் கவி.

மருகனும்மகளுந்தோழ மாருடன்வனத்துக்கேகி
பெரிகியயமுனையாற்றில் பிரியமாய்தோழரோடு
குரிகியதோணியேறி கும்பலாய் கவிழ்ந்துபோனர்
திருவிளச்செயலோயிந்த சேதிதானுரைத்திட்டீரே.

வசனம்.

மகாருஜாவே உமது மருகன் சந்திருங்கதமகாருஜா யமுனையாற்றில் தோணியேறிப்போகையில் ஓடம்கவிழ்ந்து தோழர்களோடு இரந்துவிட்டார் வேந்தே.

சித்திரவர்மன் புலம்பல் தரு.

ஜம்பை.

ஐயோஎந்தன்கண்மணியே அபுரூபஸ்ரீமந்தனியே
ஆசையுடனேவ்வளர்த்து மோசம்போனேனையோ
வையகத்தோர்தான்மதிக்க வாசலிலேகால்நிருத்தி
மனமுடித்தகெலிப்பொழிந்து வயரெரியகாலமாச்சே
போட்டபந்தல்பிரிக்கவிலியே பூரிப்பழிந்தேனே
கூட்டங்கலைந்தென்னுடைய கோட்டைமதில்தாண்டலியே
குரைகழுத்தாகிடவயிர் குமுறுதென்னசெய்வேன்
மக்கள்விளையாடுதர்க்கு பொற்பதுமைவேண்டுமென்று
வாங்கிமனமேங்குறேன் மாளாத்துயருச்சே
திம்கெலாம்மதிக்கவெகு சீதனங்கள்தானுனக்கு

தேடினேன்என்வாயில் மண்ணைதெள்ளியிட்டாய்மகளே
ஆதியிலேவேதியர்கள் ஆய்ந்துரைத்தசாஸ்த்திரங்கள்
அதுசரியாய்விளைந்துதையோ ஆரைநோவேநம்மா
ஏதினிமேல்நாமழுதால் எழுந்துவரப்போரதில்லை
எடுத்தசிவபூசைதன்னை தொடுத்துசெய்வாய்மகளே.

சித்திரவர்மன்—கவி.

மங்கிமண்மீதில்வீழ்ந்து வாடிநொந்தழுதபோதும்
கெங்கையில்கவிழ்ந்தமன்னன் கிளம்பியேவருவதில்லை
திங்களில்எடுத்தபூசை செய்துவந்தாயேயானல்
பங்கனுவருவார் நெஞ்சம்பதரிடவேண்டாமம்மா.

வசனம்.

கேளுமம்மா என்தபக்குமாரத்தியே நாவமுவதால் வருவதென்னுபிரை யோஜனம் நீ முன்னம்செய்துவந்த சோமவாரவிரதத்தை இப்போதும் செய்துவந்தால் உமதுநாயகன் வருவார் ஸ்ரீமந்தனியே.

பொது கவி.

சிந்தைதனை தேற்றிசித்திரவர்ம்மருஜன்
சேதியிந்திரஜேனனுக்கு அரிக்கைசெய்ய
மைந்தனேசந்திருங்கதனே என்றுதுள்ளி
வயிரெரிந்துகுமுரி யழும்நாளிலப்போ
முந்திநெடுநாள் பகையாய்காத்திருந்த
மூர்க்கமுள்ளசவுந்தரனும் படையைக்கூட்டி
தொந்தரவுசெய்திடவே மனதிலெண்ணி
துரிதமுடன் நிடதபுரிவருகின்றானே.

வசனம்.

சித்திரவர்ம்மருஜன் மருகனுகிய சந்திருங்கத ரிரந்ததை சம்மந்தியாகிய இந்திரசேனருஜனுக்கு தெரிவிக்க அதுகேள்விப்பட்டு நெடுநாளாய்பகைகொண்டிருந்த சவுந்தரருஜன் நிடததேசம் நாடிவருவது காண்க.

சவுந்தரறாஜன் வருவது கவி.

அண்டறண்டங்கள்போற்ற அகிலமுங்கிடுகிடென்ன
கொண்டல்போல்ஆக்றமித்து குதித்துபொன்றதத்திலேரி
சண்டனுக்கெமனைப்போலே சவுந்தரறாஜன்தானும்
மண்டமர்புரியநிடதமா நகர்வருகின்றானே.

தரு.

சத்தலோகமுங்கெடிபெத்த சண்டப்பிரஜண்ட
சவுந்தரறாஜன்வந்தேன் சொர்ணபுரிமேவும்—சவு
ரத்தினமணிமுடியாதித்தன்போல்சிரக்க
நாகரீகபூச்சக்கிரகுடையதின்மேல்பரக்க
நங்கையறாடவீணை சங்கீதம்பாட
கொல்லுநமனுக்கிவனே எமனென்றிட
வல்லதேவருறாஜர்களும் நெரிங்கிட (சத்)
ஈட்டிவில்லம்புவேலும் யிருகரந்தன்னிலேந்தி
இழுத்துமுதுகிலம்புறாத் தூணிவரிந்திசேந்தி

இரமதிலேரி பலபல விதமதுகூரி
இந்திரனைசெயித்தரசாள்வேனென்று
மந்திரிமார்புடை சூழ்ந்திடநின்று (சத்)
மைந்தன்சந்திருங்கதன் மாண்டான்கங்கையினாலே
மயங்கிஅழுதுக்குன்றி வாடுவோநதனாலே
லங்கையையொழிப்பேன் அவனுடல்சங்கவேபழிப்பேன்
வாச்சுதுபாரிதுவே நல்லகாலம்
போச்சுதுபகை புரப்படமூலம் (சத்)

சவுந்திரன்—கவி.

வந்திடும்சேதிதன்னை மதிமந்திரிமாரேகேளீர்
சந்திருங்கதனும்கங்கை தன்னில்மாண்டிரந்துபோனான்
இந்திரனொருவனாக யிருப்பதால் சமர்கள்செய்ய
மூந்தியபகைகளெல்லாம் முடித்தரசாளுவோமே.

வசனம்.

சாமபேததாணதண்டமெனும் சதுர்விதவுபாயங்கள்கற்றுஎன்னருகில்சூழ்ந்திருக்கும் மந்திரிமார்களே இந்திரஜேனமகாராஜனுடைய குமாரனாகியசந்திருங்கதன் ஆற்றில்விழுந்து இரந்துவிட்டதாய் கேள்விப்பட்டேன் சரிசரி நமக்கு நல்லகாலம்வந்தது நெடுநாள்நாம் பகைகொண்டிருந்து இச்சமையம்முடிந்ததுஆகையால் அவன்மேல் உயித்திற்கு போகவேண்டும் நமதுபடையுடனேபுரப்படுவோம் மந்திரிமார்களே.

இந்திரராஜன்மேல்--சவுந்தரராஜன்-படைஎடுத்துபோகுதல்-சிந்து.

வாருங்கோள்றண றங்கசூரரோ—இந்திரன்
பணிமூடிசிதரிட அடிப்போமே—அவன்
துணிவுள்ளநெஞ்சிமேலிடிப்போமே
பாருங்கள்என்னிடபராக்கிரமதீரத்தை
பரமனெதுத்தாலும்நான் விடுவேனோ—சமரில்
சூரவாகவருகையில்நான்தொடுவேனோ
ஆனைபரிசசேனைகளுடைய அனியணியாசம்வ
அஞ்சாமலாயுதங்களெடுப்பீரோ—இந்திரன்
பஞ்சாப்பரக்கஜெயங் கொடுப்பீரோ
பூனைமுன்எலிபோலே புலம்பிடக்காட்டியே
போவென்றுசிரையினி லடைப்பேனே—அவன்
கோவென்றலரத்தலை யுடைப்பேனே
சக்ரவர்த்தியிட நாட்டையின்றேடழித்து

நானேபரித்திவிரைத்திடுவேனே
தளசேகரமுடன் சமர்செய்யவந்தாலும்
சண்டனுக்கொழியாவேலை தருவேனே—கண்ணில்
கண்டதையொழித்தரசு புரிவேனே
அண்டாதரதகஜ துரகபதாதிகளே
அங்கெங்கும்தங்காமலே வாருங்கோள்—அவன்
தங்கும்நிடதமீதில்சேருங்கோள்
சண்டாயடித்திடுவீர் சாரணரேநீங்களும்
சாற்றுயமதிலிடித்திடுவீரோ—வில்நாணி
எற்றிக்கணை தொடுத்திடுவீரோ (வாரு)

சுவுந்தரன்-வசனம்.

அகோகேளுங்கோள்மந்திரிமார்களே நாமனைவரும் நளன் தமயேந்தியும் ஆண்டுவந்த நிடததேசம்வந்தோம் அந்தநளன் குமாரனுகிய இந்திரஜேனனை ஜெயித்துசிறைச்சாலையிலடைக்கவேண்டும் வாரும்வீரர்களே.

இந்திரஜேனன்-கவி.

அடித்திடும்சண்டாஒசையானதை யிந்திரன்கேட்டு
இடித்திடும் பிடியைப்போலே எழுந்துக்கரித்துபல்லை
கடித்துகண்சிவக்கயுத்த களத்தினில்வந்துநின்று
துடித்தெனைஜெயிக்கவந்த சூரனர்சொல்லென்றனே,

வசனம்.

ஆஹாகா!பார்த்தீர்களா மந்திரிமார்களே என் சூரனுகிய சந்திராங்கதன் இரந்துவிட்டபடியால் யாரோபகைவன்வந்து றணபேரிகை அடிக்குன்ருன் நாம் அவன்மேல்சண்டைக்கிப்போகவேண்டும் புரப்படுங்கள் படைவீரர்களே



சவுந்தரனுக்கும்.இந்திரனுக்கும்-சண்டை

சவிந்தரன்-தரு.

வாடாவென்றிடும் மதிகெட்டயிந்திரு நானடா—உந்தன்
மதத்தையடக்கிட வந்தசவுந்தரன் தானடா
மூடாமகுடமுடி பொடியாக்குறேன்
மூவுலகமும்நடிங்கிட தாக்குறேன்
முடுக்காதே வீணாய் கெடுக்காதே சரந்
தொடுக்காதே உனக்கிக்காதே—வாய்
சொல்லுமுன்னுயிரக் கணைகளுமெடுத்தேன்
வில்லில்பூட்டியுன் மீதிலேவிடுத்தேன் (வாடா)

இந்திரன்-தரு.

விடுத்தபாணத்தை பிடித்துஓடிலேனடா மூடனே இப்போ
வீம்புசெய்யாதே வந்தெதிர்நில்லடாகேடனே
அடுத்துஅடுத்துசரந் தொடுக்குறேன்பாராய்
ஆதிகாலருத்திரன்போல் சீறினேன்நேருய்
அஞ்சாப்பயலே உன்னே பஞ்சாப்பரக்கடிப்பேன்
கெஞ்சாதேநீவந்து மிஞ்சாதேபோயிடிப்பேன்
கெதிகலங்கிடஉன் படைகளைவாட்டினேன்
மதிமயங்கதந்திரத்தினால் ஓட்டினேன் (விடு)

சவுந்தரன்-தரு.

தந்திரவார்த்தைகள் எந்தனுக்கோதுவதேனடா
தாக்கிடஅக்கினிபாண மெடுத்தேன்நீதடா
இந்திரன்தேவர்கள் யாவருமிரள
ஆழியிலுள்ளநீரானது வரள
ஆக்கிரமதாவெகு சீக்கிரமதாயுனே
தாக்குவதாஉயிர் போக்குவதாய்வரும்
தருணமிதுஓடி பிழைத்திடபோடா
மரணமடைகால மாச்சுதேமூடா (தந்தி)

இந்திரன்-தரு-

நெருப்புக்குமிஞ்சி நீரதுவெல்லுமோசொல்லடா—ஒரு
நிமிஷத்தில்மோகாஸ்திரம் தொடுத்தேநீ நில்லடா
குறும்புடநேகியே கொன்றதுபாருய்
கொஞ்சப்பயலே மணமஞ்சிடப்போருய்
குலுக்காதே வந்தலுக்காதே—விரும்ப

மெலுக்காதேநீ பலுக்காதே—சென்றால்
மேதினில்சிலநா ளிருந்தரசாலுவாய்
சேதிகண்டாரிந்தேவியேநீள்வாய் (கொது)

வசனம்.

அடாவாடாசவுந்தரனே என்மகனிரந்தானென்கிரதிர்வத்தால் என்னைஜெயிக்கும்படி வந்தாயோயின்னம் அரைக்ஷிணத்தில் உன்னையமபுரிசேர்க்குரேன பாரடாசவுந்தரனே.

சவுந்தரன-வசனம்.

நானேமலங்கொண்டதருதலேப்பயலாகிய இந்திரனே நீயோஎன்னைஜெயிப்பவன் உன்னையும்உன்படைகளேயும்எமபுரிசேர்க்குரேன்பாரடா இந்திரனே

சவுந்தரன்கந்தார்த்தம்.

என்னைநீயீள்வா என்றய்யமில்லா
முன்னில்நின்றிந்த மொழிபுகன்றன்பாய்
தன்னைதான்மெச்சும் தருதலேப்பயலேஎச்சி
தொன்னைபோல்காற்றிலோட

தரு.

துள்ளிந்துள்ளியேயடிப்பேன் உந்தனைப்பற்றி
தூக்கிநெஞ்சினி லிடிப்பேன்
கொள்ளிவாய்ப்பேய்கழுகு கூளிபருந்துகளும்
கோட்டாசிருந்தலர கொள்ளையிடுகுரேன்பார் (துள்)

வசன்ம்.

கேளடா இந்திரமகாராஜனே உன்படைகளை பேய்கழுகுநாய்நரி ஜாமுண்டபூதபேதாளங்களுண்ணும்படிக்கி வெட்டிமுறிக்குறேன் பாரடா இந்திரனே

இந்திரன்-கந்தார்த்தம்.

பாரினில்நானே பலவந்தனென்று
கூரியேகெர்வம் கொண்டிடும்பயலே
ஓரியென்றெண்ணி யோசித்துவந்தாய்
வாரியேநதத்தோடுன்னை

தரு.

மண்ணின்மேல்நின்றுளரிந்தேன் உயிரோடிங்கே
வைப்பதில்லை யென்றுதிரிந்தேன்
எண்ணினஎண்ணமெல்லாம் எங்கேயடாசவிந்தரு
எழுத்துகிழிந்துஎமன் யிருப்பிடம்தெரியுதா (மண்)

வசனம்.

மூடர்க்குள்முழுமூடனாகிய சவுந்தரனே நீயோஎன்னைவெட்டி கழுகு நரி நாய்க்கு விருந்திடுபவன் உனக்கு தலைஎழுத்துகிழிக்தபடியால் என்னுடன்சமா சமர்புரியவந்தாயடா சவுந்தரனே.

சவுந்தரன் - கந்தார்த்தம்.

சிங்கத்தையானை செய்குவதென்ன
அங்கத்தைஆற்றில் அலசஒண்ணாத
பங்கர்தைபாரில் பழிக்கவுமாமா
இங்கெத்தை சொன்னபோதும்

தரு.

ஏர்க்காதென்முன்னே நில்லடா மடிவோமென்ற
எண்ணங்கொண்டாயோ சொல்லடா
பார்க்காதேமுன்னும்பின்னும் படுகளத்தினில்நின்று
பாருருநொடிக்குள்ளே பஞ்சாகப்பரக்கடிப்பேன் (ஏர்க்)

வசனம்-

இளஞ்சிங்கமாகியஎன்னை விருத்தாப்பியயானையாகிய நீ என்னசெய்வா ய்சண்டைசெய்யும்போதே ஆடெடுத்தக்கள்ளன்போல் முன்பின்பார்த்துதட் டம்பிடிக்கபார்க்குருயே நீதானுறணதங்கசூரன் இந்திரனே.

இந்திரன்கந்தார்த்தம்.

பெற்றதாய்தந்தைபேரின்னதென்று
பித்தனே யீனபேய்யனே அரியாய்
மெற்தவும்ரத்தி வீழ்குறாய்துள்ளி
உத்தனைசொன்னால்மங்கம்

தரு.

உலகம்நகைக்கும்மடையா இனிமேலுந்தன்
உயிரைக்கொல்லவுந் தடையா
பலமுள்ளவனுனென்று பந்தியங்கூறிவந்த
பவிஷுமிங்குலேந்தாய் ஒதிபருத்தால்துணுகுமோ (உல)

வசனம்.

உன்னைப்பெற்ற தாய்தந்தையின்பேர்தெரியாத தருதலைப்பயலே ஒதியம ரம்பெருத்துஉக்கிவளர்ந்தால் மச்சுவீட்டுக்குதுணுகுமா நீபலவந்தனென்றால் என்னைஎன்னசெய்வாயடா சவுந்தரனே.

சவுந்தரன்கோபங்கொண்டு இந்திரனை
அடித்துக்கட்டுதல்-சிந்து.

தத்தனதன தன்னதன்ன—தானதனத்தன்ன தனதன்ன
சித்திரக்கணைகளெடுத்தேன்—எடுத்தெட்டு

திக்குகளதிர உக்ரபாணம்தொடுத்தேன்—வெத்தியசாத்தைக்கெடுத்தேன்—இந்திரன் வீராப்பழிந்தலரி விழவிடுத்தேண்—எனக்கெதிரொருவருண்டோ அல்லவென்று எதுத்தாலும்உயிருடன்யிருப்பதுண்டோ மனக்குறைதனையொழித்தேன் நவரத்தின மணிமுடிவிழகொடிதனையிழுத்தேன் என்னிடகொடிபறக்க ஸ்த்தம்பமதில் எத்தினேன்பார்செங்கோலதுசிரக்க கன்னிமங்கையரைப்பிடிபோய் எண்ணிவந்த காரியத்தைவீரியத்தினலேமுடிப்பேன் பசபசபசவென்று முழிக்க பார்த்திருந்தபலபேரும்நகைக்க கசகசகசவென்று இறுக்கி கட்டியிருபேரையும் நெட்டியேகொண்டு தாசன்நடேசன்கவிபாடி தந்தினம் கூறியே சந்தோஷமாய்வாரார். (சித்)

பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் சவுந்தரராஜன் இந்திரனைஜயித்து நிடததேசத்துக்குச்சென்று தன்கொடியைநாட்டி இந்திரன்பெண்ஜாதி மங்கைநாயகியைபிடித்துவந்து இந்திரனுடன்கட்டியிழுத்துவரும்சமையத்தில் இந்திரனும்மங்கைநாயகியும் புலம்புவதுகாண்க.

இந்திர னும்மங்கைநாயகியும் புலம்பல்-தரு.

நீணிலத்தோர்மெச்சும் நிடதாபுரியை நாங்கள்
நெரியரசேபுரிய செங்கோலெரிய எங்களரியநகரை
நீங்கினேம் மனம் ஏங்கினேம்—நொந்து
எங்கினேம் எங்கினேம் எங்கினேம் (நீணி)

சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளைமைந்தன்
சங்ருங்கதன் மடியஎங்கியிடிய பொல்லாகொடியபாவி
சற்பனைசெய்தான் அப்பனேயடா
அப்பனே அப்பனே அப்பனே (சாண்)

சவுந்தரன்-தரு.

காரிக்கண்டவர்முய்ய கட்டினேன் வெய்யலில்
கதருவதேன்மூடனே குடிகேடனே யினிவிடேனே அடா
கத்தும்போதரிகண்டம் புத்திகெட்டவனே
கண்டாயோ கண்டாயோ கண்டாயோ (காரி)

இந்திரன்-மங்கைநாயகி-தரு.

சக்கிரவர்த்திநளன் தமயேந்திபேர்
தானழிவாய்போச்சே யிழிவாச்சே பழியாச்சே--பாவம்
சாருதா அல்லல் நேருதா--ஐயோ
நேருதா நேருதா நேருதா (சக்கி)
பொன்னரியாசனம் தன்னிலிருந்திந்த
புலையன்வீம்புமுடிக்க கொடிவிரிக்க கெடிபரக்க
போச்சுதே மங்க லாச்சுதே--ஐயோ
மங்குறோம் மங்குறோம் மங்குறோம் (பொ)

சவுந்திரன்-தரு.

இக்கெதிகண்டும் ஏகசக்ரேசன்போல்
என்னுகெர்வங்கொண்டீர் காக்ஷிக்கண்டீர் துயர்விண்டீர்-வாயில்
எதுக்குதே றத்தம் கொதிக்குதே உடல்
பதைக்குதே பதைக்குதே பதைக்குதே (இக்)

இந்திரன்-மங்கைநாயகி-தரு.

றதகஜதுரகங்கள் நால்வகைசேனையு
மைந்தழவே விடுத்தோம் துயர்கொடுத்தோம் பழிஎடுத்தோம்--பூத
நாதனே என்னு சோதனைசெய்தாய்
சோதனை சோதனை சோதனை (றதக)
கோட்டைமகுடமும் கொடுக்கமுன்னுள்தன்னில்
குரையென்னும்செய்தமோ ஆனாவைதமோ தலைகொய்தமோ-அவன்
கொஞ்சுறுன் பல்லைக் கெஞ்சுறோம்--நாங்கள்
கெஞ்சுறோம் கெஞ்சுறோம் கெஞ்சுறோம் (கோட்)

சவுந்தரன்-கவி.

மட்டுபடாமல்லர்களேசொல்லக்கேளீர்
மங்கையுடகிந்திரனைபினையலோடு
சட்டுவங்கள்செய்யாமல் சிரையிலிட்டு
சாக்கிரதையாய் சிறையிலிருக்கவைப்பீர்
பட்டுயிரந்தவர்போக மீதியான
பலசாலிவீரர்னும் மந்திமாரும்
விட்டுபிரியாமல்வர அவருக்கேற்ற
வேலைபுரிந்தூழியத்தில் விளங்கச்செய்வீர்.

வசனம்.

கேளுங்கோள் மல்லர்களே இந்திரனையும் மங்கைநாயகியாளையும் பிணையலாகக கட்டிக்கொண்டுபோய் சிறைச்சாலையிலடைத்துவிட்டுவாருங்கள் இரந்தவர்போகமற்ற மந்திரிமுதலியயாவருக்கும் அவரவருக்குத்தக்கபடி உத்தியோகம்கொடுத்து சவரக்ஷணைகுரவின்றி நடத்தும்என்மந்திரிமார்களே

பொது-வசனம்.

இந்திரஜேனனையும் மங்கைநாயகியையும் சவுந்தரன்சிறைக்கூடத்திலடைத்துவிட்டு தன்கொடிபரக்கும்படிச்செய்து நிடதேதசத்தை அரசுசெய்வது காண்க.

சவுந்தரராஜன்-அரசுசெய்வது-தரு.

ரூஜாதிராஜன் றணரங்கசூரன்
நாணயமாய்கொலு வீற்றிருந்தார்
தேசாதிதேசத் தரசரடிதாழ
தேவேந்திரன்போல்கொலு வீற்றிருந்தார்
சண்டப்ரஜண்ட சவுந்தரனார்முடி
தரித்துகொலுவினில் வீற்றிருந்தார்
கொண்டலிடிபோலே குமரிடமேளங்கள்
கொற்றவனுங்கொலு வீற்றிருந்தார்
முடியில்பூச்சக்கிர குடையதுதாங்கவே
முக்கியமாய்கொலு வீற்றிருந்தார்
வடிவுள்ளமாதர் வெண்சாமரைபோடவே
மாயனைப்போல்கொலு வீற்றிருந்தார்
மந்திரிமார்நீதி மார்க்கமுரைத்திட
மன்னவனுங்கொலு வீற்றிருந்தார்
எந்தனுக்குநிகருண்டோவென்றுசெங்கோல்
ஏந்திப்புகழ்கொலு வீற்றிருந்தார் (ரூஜ)

பொது-விருத்தம்.

மங்கையுடனிந்திரனைசிறையிலிட்டு
மகிழ்ச்சியுடன்சவுந்தரன் பாருளும்நாட்டில்
கெங்கைதனில்வீழ்ந்த சந்திருங்கதன்றான்
கீழுலகம்தன்னில்செல்ல நாகராஜன்
பொங்கமுடன்கூட்டி வெகுபணிகளெல்லாம்

போட்டனுப்பவிடைபெற்றுபடைகளான
தங்குபுகழ்ருக்ஷதநாகனேடு
தரணிதனில்கொலுவாகவருன்றனே.

வசனம்.

இவ்விதமாகத்தானே இந்திரனையும் மங்கைநாயகியையும் சிரையிலிட்டு சவுந்திரன் நிடததேசத்தை அரசாளும் நாளில் கெங்கையில் வீழ்ந்த சந்திருங்கதன் பாதாளம்சென்று நாகருஜனுல் சகல உபசாரமும் பெற்று அங்குசில நாளிருந்து மறுபடியும் நாகருஜனுல் சகல வெகுமதிகளையும் பெற்றுக்கொண்டு ருக்ஷதநாகனேடு சில சற்பபடைகளை அழைத்து பூலோகம்நாடி வருகுவிதம்காண்க.

சந்துருங்கதன் வருவது தரு சிந்து.

வாறன் சந்திருங்கதனும் பூலோகம்நாடி வானவர் பூமாரிபெய்ய தானவர்போற்ற அந்தமுள்ளநாகருஜ நிடத்தில் -அனேகவித பூஷணமும் விடைகள்பெற்று ருக்ஷதநாகனுடனே வெகுவித ரஞ்சிதமானப்படையை அஞ்சலாய்க்கூட்டி கண்ணே பெண்ணே மானே தேனே ஸ்ரீமந்தனியே கட்டியணைத்தொருமுத்தமிட்டிடவாடி என்று பலவாருசொல்லி சந்திருங்கதன் எத்திசை

யும்போற்றி செய்ய சத்துருவாட முத்துக்குடைதான் பிடிக்க அனேகபெண்கள் முன்னே கவரியிருபாலுவீச. (வந்தான்)

பொது வசனம்.

ஸ்ரீமந்தனி சோமவாரவிரதம் பூர்த்தியாய் முடிக்காதபடியால் சந்திருங்கதன் மரைவாக நின்றுக்கொண்டு ஸ்ரீமந்தனியைப் பார்த்துச் சொல்வது காண்க.

ஸ்ரீமந்தனியைப்பார்த்து சந்திருங்கதன்
சொல்லல் தரு.

அஞ்சுகமேவாருய்
அமுர்தமேறதியேவாருய்
கொஞ்சிடும்கிதியேவாருய்
கோதைஸ்ரீமந்தனிவாருய்
அருந்ததிதன்னேயொத்த அழகுமாமயிலே
திருந்தமாய்வாழ்குவாய் எழுந்திரடிகுயிலே (அஞ்)

ஸ்ரீமந்தனி தரு.

கன்னலேமாருவாருய் — கார்உபகாருவாருய்
பொன்னேகெம்பீரு — வாருய்புகழு ஒய்யாருவாருய்
புகழுஒய்யாரனே — பூவையர்மன்னனே
நிதர்நளன்பேரனே — நிடதமாளுந்தீரனே (கன்)

வசனம்.

பார்த்தீர்களா சகிமார்களே நமது பிருனேசரைப்போல் சப்தம்கேட்டாதல் அவருடன்வார்த்தையாடினேன் திரும்பிபார்க்கையில் யாரையுங்காணேமடி தாதியே.

சந்திருங்கதன் தரு.

மதுரசெந்தேனேவாருய் — வாகலேமானேவாருய்
பதுமநீதானேவாருய் — பாவையேமணியேவாருய்
பலநரியாமலிந்த — பாரிலுந்தனேவிட்டு
ஜலம்பெருகும்யமுனே — தன்ளுளின்ளுளிருந்தேன்

ஸ்ரீமந்தனி தரு.

மன்னவாசேரவாருய் — மகிபனே துரையேவாருய்
பொன்னேபூஷணமேவாருய் — பொற்புள்ளதீருவாருய்

பொற்புள்ளதீரனே அற்புதவீரனே
தற்சமயமென்னை தழுவியணையவாருய் (மன்)

ஸ்ரீமந்தனி வசனம்.

அரிவிற்சிறந்த அபுரூப சேடிமார்களே என் பிராணேசர் மறைவாகயிருந்து பேசும்காரணம் தெரியவில்லை அதின் விபரத்தை சொல்லவேண்டும் தாதிமார்களே.

தாதிகள் வசனம்,

கேளும் ராஜபரமேஸ்பரி உமது பிராணேசர் மறைவாக ஒளித்திருக்கும் காரணம் என்னவென்ருல் நீ நடத்திவரும் சோமவார்விரதம் பூர்த்தியாய் முடித்தாயானுல் நேரில்வருவார் தாயே.

ஸ்ரீமந்தனி கவி.

சித்திரவல்லிமுத்து ஜெகமோகனுங்கிவாரீர்
அத்தியையுரித்தோன் பூசையாநம்புலிதினத்தில்
பக்தியாய்செய்வதர்க்கு பண்புள்ளயமுனைக்கேகி
சுத்தியாய்ஜலமெடுத்து தூக்கியேவருகுவோமே.

வசனம்,

கேளுங்கோள் சேடிமார்களே நீங்கள் கூரியப்படியே சோமவாரவிரதம் செய்யவேண்டும் அதற்கு யமுனையாற்றில் சென்று ஜலந்திரட்டிக்கொண்டு வருவோமடி தாதியே.

ஸ்ரீமந்தனி ஜலம்திரட்டுதல் தரு ஜம்பை.

கற்பிலுயர்ந்திடும்சேடி களிப்புடனே நமதுமாளிகைக்கோடி பொற்குடங்கள் எடுத்தாடியிப்போ போவோம் யமுனைநதிதனைத்தேடி. (கற்)

தோழிகள் ஆனந்தகளிப்பு.

ஆக்கினைதவருமல்தாயே குடங்கொண்டு
அனைவருவந்தெதிர்நின்ருேம் பாரப்பாயே
பாக்கியவதியெனும்நீயே—முன்னுல்
பக்ஷமுடனேநடந்திடுவாயே (ஆக்)

ஸ்ரீமந்தனி.

நடனசிங்காரியேதாதி—இப்போ
நடந்துவருவீ ரீசர்பாதத்தைஓதி

திடமாகவேநதிமீதில்—வந்தோம்
தீங்கில்லாமல்குளித்துசெல்வோமயிர்கோதி (நட)

தாதிகள்.

குளித்துக்குடத்தில் ஜலம்மொண்டு—தலையில்
கூசாமலேவைத்துக்கொண்டோமேபண்டு
தெளிவானவிரதத்தையின்று—தாயே
செய்துமுடித்தால்சுகுர்தமுமுண்டு (குளி)

ஸ்ரீமந்தனி வசனம்.

கேளுங்கோளடி தாதிமார்களே நாமனைவரும் ஜலம் திரட்டிக்கொண்டு வந்தபடியால் இனிமேல் சோமவார விரதத்தைமுடித்து எனது பிராணேசரை நேரில்கண்டு பேசுகிறேனடி சேடிமார்களே.

ஸ்ரீமந்தனி சோமவாரவிரதம் செய்தல்
சுரம்.

சித்திபுத்திவிநாயகனே சீர்பெறவேபோற்றி
சிந்தைமகிழ்வாய் விரதம்செய்குவண்டிதாதி 1.
மணலாலேசிவலிங்கம் மகிழ்ச்சியுடன்செய்து
மாதாபார்வதியை யிடமாகவைத்தேன் தாதி 2.
அத்தர்பன்னீர்புனுகுஜவ்வாதழகியகஸ்தூரி
அகமகிழ்வாய்இருபேர்க்கும் அணிந்தேனடிதாதி 3.
ஜாதிமல்லிமுல்லையுடன் ஜண்பகம்ரோஜாப்பு
சரிந்தவில்வம் கொன்றைதும்பைசாத்தினேனே தாதி 4.
உயர்ந்தசெம்பொன்பட்டாடை உடுத்தியதின்மேலே
உருமாலைபூமாலை தொங்கவிட்டேன் தாதி 5.
நவமணிகள்தான்பதித்த நகையனந்தம்பூட்டி
நடுவில்சந்திரசூரியபிரை நான்தரித்தேன் தாதி 6,
அபிஷேகமுதலனந்தம் ஆனதின்பின்நானே
ஆதிபரமபரனைக்கண்டு ஆனந்தங்கொண்டேனே 7.
தலைவாழையிலையருத்து தற்பரன்முன்னாலே
தான்பரப்பிதண்ணீரை தளரதெளித்தேனே 8.
முப்பழமும்தேங்காயும் முதிரவலும்பாலும்
முன்னேயிலைமீதிரந்து மூடாமல்வைத்தேனே 9.

பஞ்சாமிர்தங்களுடன் பாணக்கம்செந்தேனும்
பலபலவாம்பலகார பக்ஷணவைத்தேனே 10.
அடைக்காயுவெற்றிலையும் அன்புடனேவைத்து
அருமறையோர்வேத மந்திரம்அற்சிக்கசெய்தேனே 11.
தூபதீபம்தான்கொடுத்து துலங்கிடவேகுந்தி
துய்யசிவபூசைசெய்ய துவக்கினேனேதாதி 12.
காலின்கீழ்கால்மடித்து கதித்தசித்தர்போலே
கனமானசிங்குவையை மடித்தனடிதாதி 13.
தந்தமதைநெறுக்காமல் தாவியதோர்நாலும்
தாண்டாமலேநிறுத்தி தங்கவைத்தேன்தாதி 14.
பார்க்கிரதோரிருகண்ணும் நிமைக்காமல்பார்த்து
பண்புடனேநாடிநரம்பசையாமலேநின்று 15.
புருவமையத்திடையில் பொருந்தும்சுழிமூனையை
பூட்டியிதோவாசியிலே பொருந்தவைத்தேன்தாதி 16.
வாங்கயிலேவகரமதை வண்மையுடநிழுத்து
வருகயிலேசிகாரமதை வளையவிட்டேன்தாதி 17.
பஞ்சவர்ன்னயீசனையும் பார்வதியாள்தனையும்
பரமண்டலநடுவில் பார்த்தேநடிதாதி 18.
கண்டுயெந்தன்கணவன்வர களிப்பாய்வரம்பெற்றேன்
கதிர்மதிசூழுலகமதில் யிவ்விதமாய்செய்தோர் 19.
கோரியதோரெண்ணமெலாம் குணமுடனேமுடித்து
குவலயத்திலீசனைப்போல் யீசர்பதம்சேர்வார் 20

பொது வசனம்.

இவ்விதமாக ஸ்ரீமந்தனி சோமவாரவிரதம் செய்து சிவபெருமான் திருவருள்பெற்று தமது மாளிகைக்கு திரும்பிவருகையில் அனேக சுபசகுணங்கள்கண்டு பரவசமுற்று மாளிகைவந்து சேர அக்காலையில் மறைவாகயிருந்த சந்திருங்கதன் தன் கண்ணுக்கு தெரிய ஸ்ரீமந்தனியைகண்டு சொல்வது காண்க.

ஸ்ரீமந்தனி கவி.

அருமைகண்ணுளாயிந்த யமுனையில்நெடுநாளாக
சிருமையில்லாமலிங்கே சென்றேன்னமாயிருந்தீர்
உருமையாய்வந்ததோழ ரொருவருங்காணேநிந்த
இருவருமாரேநன்ருயியம்புவீரரியத்தானே.

வசனம்.

கேளும் பிராணேசா யமுனையாற்றில் ஓடம்கவிழ்ந்து தோழரோடுமூழ்கி விட்டீரே மறுபடி எவ்விதம் இங்கேவந்தீர் சொல்லவேண்டும்நாதா.

சந்திருங்கதன் தரு.

சொல்லவாய்போதுமா கண்காக்ஷியை
சொல்லவாய்போதுமா
சொல்லவாய்போதுமா வல்லசித்திரவர்ம்மன்சேயே
செதித்திடவேயுனை வெறுத்துநான்போனேன்
புதித்திதோழரை தினமங்கேகாணேன் (சொ)

சோகமிகவானேனே துயருலொன்றும்
தோற்றுமல்போனேனே
வேகமாய்பாதாளமென்னும் வீதியிலேவீழ்ந்தேன்
விந்தையாகநாக கன்னியர்கூடினர்
அந்தமாகதக்ஷகனிடஓடினர் (சொ)

அரசன்முன்சென்றார் அந்தரமாய்ஓர்
ஆள்வந்தானென்றார்
சரசமுடையமந்திரி தன்னாலெனையழைத்தார்
தடையிலாமலவர் சமுகத்தில்நானே
நடையுடனேகியே நானும்நின்றேனே (சொ)

எனைகேழ்க்கஉரைத்தேன் தக்ஷகன்மனம்
இதங்கவேகரைத்தேன்
புனையும்பூஷணங்களும் புரவிதந்துதவியாய்
போமெனபதுமன் அசுரனைதந்தார்
வாவெனகூட்டியும் மானிலவந்தார் (சொ)

சந்திருங்கதன் விருத்தம்.

செம்பேகண்மணியே பச்சைகிள்ளையேபுஷ்பருகம்
விம்மமேநான்போய்வந்த விபரங்களெல்லாம்சொன்னேன்
அம்புவியாளுமெந்தை அன்னையும்தந்தைதாயும்
ரெம்பவாழ்ந்திருக்கின்றாரே நொந்தனரேசெல்வாயே.

வசனம்.

கேளும்பெண்ணே ஸ்ரீமந்தனியே நான் சென்றதின்பின் என்தாய்தந்

தையர்கள் சுகமாய்வாழ்கின்றார்களோ அல்லது துக்கமடைகின்றார்களோ சொல்லுவாயடி கண்மணி,

ஸ்ரீமந்தனி கவி.

நாதனே என்னசொல்வேன் நம்மிடகிடதநாட்டில்
பாதகன்சவுந்தராஜன் பரித்தரசாள்வதன்றி
பேதமாய்மாமன்மாமி பிதரவேசிறையிலிட்டான்
ஓதவாயில்லையங்கு ஒடுங்குமென்செய்வேனையோ.

வசனம்.

பிராணபதமே தாங்கள் சென்றதின்பின் உமது சாய்தந்தையரும் என் மாமன் மாமியாராகிய இருவரையும் பாவியாகிய சவுந்தரன் ஜெயம்செய்து சிறைச்சாலையில் அடைத்து வைத்திருக்கிறான் நாதா.

சந்திராங்கதன் சண்டைக்கு புரப்படுதல் தரு.

யீனப்பையலேநல்லதாகட்டும்—அவன்
எந்தலோகம்போனாலும் போகட்டும்
மானமில்லாதமடையனைத்தர்க்குறேன்
வஞ்சியேநீசொல் அதமதாக்குறேன் (யீன)

நேயரேநீங்களுவாருங்கோள்—எந்தன்
கிடதநகரைக்கண்ணால்பாருங்கோள்
பேயனைநெஞ்சம்பிளத்திடவாட்டுவோம்
பெண்டுப்பிள்ளைகள் எமன்பதிபோகஓட்டுவோம் (யீன)

நளன்சிம்மாதனமேறப்போகுமே—அற்ப
நாய்முடிபூண்டிடலாகுமோ
தளமானதெல்லாம் தவிடாய்யிடிக்குறேன்
தாயோழிபையல் கைகாலையொடிக்குறேன் (யீன)

அரவமன்னனே தூதுசென்றிடும்—உன்னை
ஆரென்றால்பதில்சொல்லிகின்றிடும்
கறமுள்ளவனேபடிகளம்வாடாவென்றோது
கடிந்துன்னைபேசினால் மீளாக்கணைதொடு (யீன)

வசனம்.

கேளுமையா நாகராஜனே நீர் சவுந்தராஜனிடத்திற்குபோய் இந்திரஜேன மகாராஜன் குமாரகனாகிய சந்திராங்கதன் உன்மேல் உயித்தியம்புரிய

வந்திருக்குமுறென தெரியவையும் அவன் உம்மேல் எதிர்த்தால் சண்டைசெய்து ஜெயங்கொண்டுவாரும் நாகபூபதியே.

நாகருஜன் கவி.

இந்தமொழிசொன்னளவில் நாகருஜன்
இருவிழியில் அனல்பெருகபொறிகளோட
கந்தரம்போல்கெற்சித்து புயங்கள்தட்டி
கையூறுதென்று மீசைதுடிதுடிக்க
இந்திரனைசிரையிலிட்டு முடிபூண்டாளும்
இருஜனெனும் சவுந்தரன்முன்வால்குவித்து
குந்தமதிமந்திரிகள் சூழருஜன்
கூறுவான்யாரென்றுசீறுவானே.

வசனம்.

ஆஹாஹா பார்த்தீர்களா மந்திரிமார்களே யாரோ ஒரு பாம்பு நமது சிம்மாசனத்துக்குமேல் வாலைசுருட்டி அதின்மேல் தலையைவைத்து பார்க்கிறது அதனை தீரவிசாரிக்கிறேன் மந்திரி.

சவுந்தரனுக்கும் நாகருஜனுக்கும் தர்க்கம்

சவுந்தரன் தரு.

ஆரடாபாம்பேயிங்கேவந்தவன் ஆரடாபாம்பே
ஆரடாஎன்னிட ஆண்மையரியாமல்
நேருகஎன்முன்னே நீ குந்திருக்கிராய் (ஆர)

நாகராஜன் தரு.

சொல்லக்கேளடா சந்திராங்கதன் தூதன்வந்தேனடா
வல்லவன்எனதுதுரை கொல்லவந்தழைக்குரார்
வாடா வாடா வாடா ரோஷமுண்டானல் (சொல்

சவுந்தரன் தரு.

வந்தகப்பட்டான் சந்திராங்கதன் வகையில்லாகெட்டான்
இந்திரன்போராதென் திருக்கச்சிரைதனில்
எழுத்தின்படிவந்தானே கொழுத்தப்பயலேபோச்சொல் (வந்)

நாகராஜன் தரு.

கடைப்படுவாயோ யுத்தகளத்தில் நிற்பாயோ
கிடைகார்க்கும் நாய்போல் கிளம்பாதே உன்னிட
கெர்வத்தைபோக்கியே மர்மத்தைவெளியிட்டேன் (கடை)

வசனம்.

அடாவாடா சவுந்தரருஜனே தூதுவந்த என்னுடன் யுத்தம்செய்யவந் தாயல்லவா உன்வீறபராக்கர்மத்தை கண்ணிமைக்கு முன்காட்டுகுரேனடா சவுந்தரனே.

சவுந்தரனுக்கும் நாகராஜனுக்கும் சண்டை

நாகராஜன் சிந்து.

தூதுசொல்லவந்தஎன்னை எதுகாரணத்தினாலே
  தூள்பாக்கநீபடிக்கறாய் மன்னனே—அதை
  சொல்விளதிர்கில்லடா கண்ணனே
மோதூவகனை தன்னையேவி வாதுசெய்யாவிட்டாலும்
  முடியுமோநீஜெயிக்கமூடனே—என்னை
  முரட்டுதனம்குடிகேடனே
எதுஉந்தனைநானிப்போது அகமேசெய்து
  எமன்பதிசேர்க்கக்கோபமீறினேன்—சீச்சீ
  என்னிடவிஷாக்கினியைத்தூரினேன்
  எட்டியெட்டிநீ சென்றாலும்
  மட்டியேவிட்டேகுவேனோ
  அஷ்டமாநாகங்களை
  அழைத்துனைக்கொல்வேனோ (தூது) 0

சவுந்திரன் சிந்து.

கொல்லுவேன்பாரென்றிடும் வல்லமையுடையபாம்பே
கூசாமலென்னெதிர்நில்லடா—இப்போ
குமங்கஉடைப்பேனுந்தன்பல்லடா
பொல்லாதகாலஉனக்கு சொல்லாமல்வந்ததோ
புகைபாணந்தன்னைக்கையிலெடுத்தேனே—வில்லில்
பூட்டியுன்மீதினில்விடுத்தேனே
சல்லாபமாகஉந்தன் தலைகொண்டுபோகுது
தட்டுகெட்டுஓடாதேபையலே—என்ற
தயிரியங்கொண்டுவந்தாய்மெய்யிலே
தாக்குவேனுயிர் போக்குவேனிப்போ
ஆக்குவேன்பஞ்சாய் நீக்குவேனடா (கொல்)

நாகராஜன் கவி.

கோடையிடியிடித்ததுபோல்நாகராஜன்கொக்கரித்துயிருவிழியும்பொரிபரக்க
ஜாடைமிகசெய்துசவுந்தரன்மேலோங்கும்சந்திரவட்டக்குடைதனைபிடிங்கிக்கொண்டு
தாடையிலோரடியடித்துகீழேதள்ளி தாண்டிவெகுவேகமுடன்வந்துநின்று
ஆடையவிழ்ந்தழுகுசந்திராங்கதர்க்கு அறிவிப்பான்உற்றதைதெரிவிப்பானே.

பொது வசனம்.

சவுரியங்கூரிய சவுந்தரனை தாடையில் அடித்து அவன் எழுந்திருக்கு முன் அவன் தேர்மேல்பாக்கும் சந்திரவட்டக்குடையை பிடிங்கிக்கொண்டு ஓடிவந்து சந்திராங்கதனுக்கு தெரிவிக்கிறவிதம்காண்க.

நாகராஜன் வசனம்.

சந்திராங்கத மகாராஜனே சவுந்தரராஜனை யுத்தத்தில் பார்க்குமிடத்தில் வெகுபராக்கர்மசாலியாய் காணுகிறது அவனை ஜெயிக்கவென்றால் முடியாது அவனை தாடையில் ஓர்அடியடித்து அவன்எழுந்திருக்குமுன் அவன்தேர்மேல் பரக்கும் சந்திரவட்டக்குடையை பிடிங்கிக்கொண்டு வந்தேன் யிதோபாரும் அரசே.

சந்திராங்கதன் கவி.

சத்திரமதைகையேந்தி சந்திராங்கதன்முன்பாக
வைத்துநின்றிடவேநாகன் மகிழ்ந்திடசவந்தராஜன்
எச்சினல்அரசுபெற்ற யிருமாப்பைமனதிலெண்ணி
யுத்தம்செய்திடவே சேனையுடன்றணக்களவர்ரானே.

வசனம்.

வாருங்கோள் தோழர்களாகிய நாசபூபதிகளே அந்த சவுந்தரன்மேல் உயித்தியம்செய்யவேண்டும் வாருங்கோள் நாகராஜர்களே

சந்திராங்கதன் சண்டைக்குபோகுதல் தரு.

கோடையிடிபோலேஅதட்டி கொக்கரித்தாற்பரித்து
ஜாடையுடன்சென்றுசவுந்ரனை சங்கரிக்கஎழுந்தான்
முத்துகுடைபிடிக்கஅனேகம்பேர் முன்னேபன்னீர்தெளிக்க
சத்தசாகரஒன்ருய்எழுந்தாய்ப்போல் சங்கரிக்கஎழுந்தான்
மீசைதுடிதுடிக்க கண்கள்மின்னிபொறிபரக்க
ஓசைபேரியடிக்கசவுந்தரமேல் ஓங்கிநடந்தானே
வாசவனும்நடுங்கயிமையவர் வானத்திலேயொடுங்க
தாசன்நடேசன்கவிபாடி தாண்டியேவாரானே

வசனம்.

கேளுங்கோள் நாகபூபதிகளே நாமனைவரும் நிடதபுரிவந்தபடியால் சவுந்தரன் அரியும்படி றணபேரிகைமுழககிவையுங்கோள் நாகராஜர்களே.

றணபேரிகைகேட்டு சவுந்தரன் சண்டைக்கு வருதல்

ஆனந்தக்களிப்பு.

றணரங்கசூரரேவாரீர்—நிடத
நாட்டில்வந்தவனின்றுஎன்னென்றுபாரீர்
நிணங்கொண்டநாகன்தாஎன்றான்—முத்து
நிரைந்தக்குடையைப்பற்றிமறைந்துபோய்நின்றான் (றண)
இந்திரன்மகன்சந்திராங்கதனும்—சிறை
இருப்போரைமீழ்க்க எழுந்துவந்தானும்
சிந்தைகலங்கியேவாட—வந்த
தெம்புகுலேந்தென்னைதெண்டநிட்டோட (றண)
ஆனைகள்பரிகள்மீதேறி—முதிகில்
அம்புராதூணிவரிந்தாயுதவாரி
சேனைபடைகும்பம்கூட்டி—மன்னன்
சிங்காரித்தன்பாய்றதமதைஓட்டி (றண)
நடந்தானே றணக்களம்நோக்கி—வில்லை
நாணேற்றியைால்நன்ராகத்தூக்கி
இடந்தனைக்கண்டரிந்தானே—பாண
மெடுத்துசந்திராங்கதன்மீதெரிந்தானே (றண)

சந்திருங்கதன் கவி.

கொல்லவேபாணந்தன்னை கொளுத்தியென்மீதில்போட்ட
வல்லமையாலேபலதமாக்கினேன்க்ஷணநேரத்தில்
நல்லதுநாகபூபா ராக்ஷதாநீங்களேகி
வில்லதையொடித்து எமன்விடுதிக்கு அனுப்புவீரே.

வசனம்.

கேளும் ருக்ஷதநாகபூபதிகளே என்மேல்எதிர்த்த சவுந்தரராஜனை அ[illegible]தா குதப்படுத்தி செயம்பெற்று வாருங்கோள் ருக்ஷதநாகமே.

நாகராஜன் கவி.

நளிடபேரன்கூர நாகனோடசரன்பல்லை
மளமளன்றேகடித்து மார்பிலம்நடுநடுங்க
தளமதைகூட்டிவந்த சவுந்தரூவாடாவென்று
அளவிலாசேனையெல்லாம் அதம்செய்துநடக்கின்றாரே.

சவுந்தரனுக்கும் ருக்ஷதநாகனுக்கும் சண்டை

ருக்ஷதநாகன் தரு.

வாடாசவுந்தரு ஓடாதெங்கள்முன்
வருவாயோஜெயம் பெருவாயோ
மூடாஉனக்கென்ன கேடாசொல்லடா
முடுக்குள்ளவனே படுக்களத்தினில்நில்லடா
போடாநீபிழைத்திடும் சொர்ன்னபுரிக்கி
பொடிபொடியாக்கி போடுவேன்நரிக்கி (வாடா)

சவுந்தரன் தரு.

என்னடாருக்ஷதப்பயலே நாகா
இருவருமாய்கெருவங்கள்பேசுநீர்
முன்னேநின்றால் கோபமூட்டுதுவாட்டுவேன்
மூர்க்கரேஎமன்பதி தன்னையேகாட்டுவேன்
சின்னப்பயலேயிடம் தேடியேபாருங்கோள்
சீக்கிரம்சீக்கிரம் ஜெடலத்தைக்காருங்கோள் (என்)

ருக்ஷதநாகன் தரு.

சபாசுஎங்களை தடுத்து நீ பிடித்துமே
தாக்குவேனென்குருய் போக்கிரிப்பயலே
அபாசாங்ன்றுநீ அலேந்திடப்போருய்
அதுதெரியாமலென் அருகினில்வாருய்
தபாச்சிக்கொள்ளடா சேனையும்போச்சே
தவித்துயாவரும் திகைத்திடலாச்சே (சபா)

சவுந்தரன் தரு.

அரக்கனேநாகனே எரக்கயென்சேனை
அதஞ்செய்வோமென்ற கெர்வமென்னடா
பரக்கடித்தோட்டிடும் பாணம்கையெடுதேன்
பவுஷைபரந்துக்கிரையாகவேகொடுத்தேன்
சிரக்கயிருக்காமலுருக்கமதாக
பரக்கடிக்கவந்தேன் ஜென்மவீணுக (அர)

ருக்ஷதநாகன் கவி.

சரிசரிநாகபூபா சவுந்திரன்சொன்னவார்த்தை
தெரியுதாசற்றேநில்லு சேவுகமானதெல்லாம்
அரியுரேன்ஒருநொடிக்குள் ஆத்திஞர்போல்கிழித்து
எறியுரேன்பாருயென்று எதுத்துபோர்செய்குவானே.

வசனம்.

பார்த்தாயே தம்பிநாகசேனையே சவுந்தரன் நம்மை ஜெயிக்கும்படி அளவில்லாத பாணங்களைவிட்டு தனக்குதானே மதங்கொண்டவனுய் உற்சாகங்கொண்டிருக்குருன் ஆகையால் ஆத்திஞர் கிழிப்பதுபோல் கிழித்தெரியவேண்டு நாகபூபதியே:

இதுவும் ருக்ஷதனுகனும் சவுந்திரனும் சண்டைசெய்தல்

ருக்ஷதநாகன் தரு.

ஓங்கிஓங்கிதான்குதித்தாண்டி—அரக்கனும்கை
ஊறுதென்றுதுடிதுடிததான்
ஓங்கியேஅடிக்கமனம் ஏங்கியேகிலிபிடிக்க
சோங்கிபறக்கடிக்க சொர்ன்ஞபுரியிடிக்க (ஓங்)

சவுந்தரன் தரு.

மட்டில்லாதகோபமீறினன்—அரக்கன்முன்னே
வாடாவாடாவென்றுசீறினன்
கொட்டியேகைகோபத்தாலே அதட்டியசிங்கத்தைபோலே
வெட்டிடுங்கைவாளினாலே ஒட்டிஎரிந்திட்டான்மேலே (மட்)

ருக்ஷதநாகன் தரு.

விட்டவாளை தொட்டுமுறித்தான்—ஒருமலையை
வேரோடுபிடுங்கிசிரித்தான்
கெட்டுவிடப்போறாயிதோ விட்டமலைபட்டவுன்
கட்டைமுடிந்துகாலன் கிட்டவந்தழைக்குறானே (விட்)

சவுந்தரன் தரு.

காலமில்லையென்றுஎழுந்தான்—ஓடியேசங்கங்
காட்டினிலலறிவிழுந்தான்
ஆலகால போலேசீறும் நீலவிழிருக்ஷகனும்
ஓலமிட்டழைக்குறானே தூலம்போலெதிரேநின்று (கால)

பொது வசனம்.

அகோதெப்படி என்றால் சவுந்தராஜன் ருக்ஷக நாகனுக்குப்பயந்து மறு படியும் திடச்சித்தனாய் பயந்தெளிந்து ருக்ஷதநாகன்மேல் உயித்தியம் புரிவது காண்க.

ருக்ஷத நாகனுக்கும் சவுந்தரனுக்கும் சண்டை

சவுந்தரன் தரு.

நாகராக்ஷதனேநீவாடா மல்லுத்தம்செய்ய
நடுங்கிதிரும்பிபார்ப்பதேனடா திருடனைப்போல்

நாகராக்ஷதன் தரு.

திருடனென்றுதிட்டுமுந்தனை யிருபிளப்பாய்
தீவிரமாய்கிழித்தெரிகுறேன் ஓடாதேநில்லு

சவுந்தரன் தரு-

நில்லுவென்றுசொல்லுமுன்னமே கையைத்தேய்த்து
நெட்டிமுறித்துக்கிட்டவாதேனே கோட்டானைப்போலே

ஸ்ரீமந்தனி திருக்கல்யாணநாடகம்.

நாகருக்ஷதன்.

ஆனைசிங்கம்தன்னைக் கொல்லுமோசவுந்தரனே
அலிக்கிகுலிக்கி நிற்பதேனடாசவுந்தரனே.

சவுந்தரன் தரு,

நிற்கும்போதிடிபாணமெடுத்தேனே நாகருக்ஷதா
நெஞ்சைப்பிளந்து பஞ்சாப்பரக்கவே நாகருக்ஷதா

நாக ருக்ஷதன் தரு.

பரந்தயிடிபாணந்தன்னையே கையாற்பிடித்து
பத்திக்கடித்துக்கொல்ல எண்ணினேன்சவுந்தரனே.

வசனம்.

இஞ்சிற்றேனும் வீரபலருக்கர்மசாலி யென்றெண்ணாமல் உயித்தியம்புரிய வந்தமடையனே கண்ணிமைக்குமுன் என் திருணியைப்பாரடா மூடனே:

சவுந்திரன் கவி.

நாகமதுசீறிவரு வேளை தன்னில்
நடுநடிங்கிபலமொடிங்கி சவுந்தரராஜன்
போகாமலிவ்விடத்தி லிருப்போமாகில்
பூரிக்குநமதுயிரை மாய்க்குமென்று
ஏகபராபரன்பதத்தைப் போற்றிசெய்து
எங்கியேசங்கம் புதருக்குள்ளோடி
பாகமுடன்வந்தவினை தனைநினைந்து
பதருவான்கோவென்று கதருவானே.

பொது வசனம்.

அகோதெப்படியால் நாகருக்ஷதன் சவுந்தரனை கடித்துக்கொல்வோமென்று ஓடிவருகையில் சவுந்தரன் கண்டுபயந்து இந்த இராச்சியம்போனாலும் போகட்டும் நமதுயிரிருந்தால் போதுமென்றும் எண்ணி பக்கத்திலுள்ள சங்கங்காட்டில் ஓடி பதுங்கிக்கொண்டு தனக்குவந்த ஆபத்தை நினைந்துமறுகிடுவதுகாண்க.

சவுந்திரன் புலம்பல் ரூபகம் தரு,

என்னசெய்வேன் எதுசெய்வேன்
என்னிடவிதி வசத்னத

பன்னரும்சொர்ணபுரியை
பக்ஷமாக ஆண்டுவந்து
நன்னயமில்லாத் துஷ்ட
நடக்கையாலேநானும்சென்று
மன்னன்நளமகாராஜன்
மைந்தன்யிந்திரஜேனன்தன்னை
கோட்டைகொடித்தனைபரித்து
கொண்டுசிறைவைத்தேனேயோ
ஓட்டியேபடவில்மாண்ட
ஓகோசந்திரர்ங்கதனும்
தாட்டிகமாய்புவியில்வந்து
தனதுநாகசேனைதன்னை
போட்டியாகவிட்டுயிர்
போக்கடிக்கவந்ததினால்
கையிற்கிடைத்தப்பொருளை
கண்டபடியேயெறிந்து
ஐயையோவேரேபொருளை
ஆராய்ந்தெடுத்தக்கதைபோல்
எந்தனிடஅரசுவிட்டு
எதிராடியிதையுவிட்டு
திருடனைப்போல்யானுமிங்கே
தேங்குறேன்சங்கஞ்செடியில்
காட்டில்வாழும்பக்ஷிகளே
கானமயில்சிங்கங்களே
வாட்டுவான்நாகரூக்ஷதன்
வந்தாலென்னைக்காட்டவேண்டாம்
காக்கைகழுநாயினமே
காட்டில்வாழும்தேவதையே
போக்குவானெந்தனுயிரை
புரவலன்முன்காட்டவேண்டாம்.

பொது வசனம்.

இவ்விதமாகத்தானே சவுந்தரன் சங்கம்புதருக்குள்ளே யிருந்து புலம்பிக்கொண்டிருக்க அவ்வேளையில் நாகரூக்ஷதன் சவுந்தரனைக்காணுதபடியால் பலயிடமும் தேடிப்பார்த்துவிட்டு சொல்வது:

நாகருக்ஷதன் கவி.

ஓடியேசவுந்தரராஜன் ஒளித்திட அறக்கனெங்கும்
தேடியேகாணாத்தாலே திரிம்பிவந்தரவனோடு
கூடியேகைகாலாறி குளமதிலிரங்கியேநீ
ருடியேவந்தருசாரிந்திடவுரைசெய்வானே.

வசனம்.

ஓடியசவுந்தராஜனை நாகனும் நாகஜக்ஷதனும் தேடிபார்த்தும் காணாமையால் குளத்திலிரங்கி ஸ்தானபானம்செய்து களைதெளிந்து சந்திராங்கதராஜனிடம்வந்து சொல்லுதல் காண்க.

ருக்ஷதநாகனுக்கும் சந்திராங்கதனுக்கும் தர்க்கம்

நாகருக்ஷதன் தரு.

இந்திரஜேனன்தந்த சந்திராங்கதராஜனேகேளுமையா
பந்தயங்கூரிசவுந்தரனோடினான் பகையில்ஜெயம்நமக்கே

சந்திராங்கதன் தரு.

ஓடினானென்றுரைத்தீர் அரவபூபாலவீராருக்ஷதா
தேடிபிடித்துவருவீ ரவன்மூளைகள்சிதரவடிப்போம்

இருக்ஷதநாகன் தரு.

பயந்தவர்மீதில்துஜம் தொடுத்திடப்போகாதென்பார்பெரியோர்
ஜெயமுடிபூண்டராசானுவீர் தந்தைதாய்சிறையைநீக்கி

சந்திராங்கதன் தரு.

வாருங்கோளென்றழைத்து ஓட்டமாய்ஓடிவாசற்படிதிறந்து
தாறுமாறாககயறுகட்டெல்லாம் தரித்துவிடுத்தனனே.

பொ வசனம்.

சந்திராங்கதன் தாய்தந்தையரை சிறைச்சாலையைவிட்டு நீக்கினமாத்திரத்தில் இந்திரஜேனனும் மங்கைநாயகியும் கண்டு சொல்லுதல்.

இந்திரன் மங்கைநாயகிக்கும் சந்திராங்கதனுக்கும் தர்க்கம்

இந் மங் தரு.

மங்கையுடனிந்திரனெழுந்து வாடாமகனேயென்று
செங்கயினால்வாரிதங்கள் மடியில்வைத்துதேம்பிமுத்தங்கொடுத்தார்

சந்திராங்கன் தரு.

முத்தங்கொடுத்தமுகசந்திராங்கதன் முக்காலடிவணங்கி
சித்தங்கலங்காதீர்பெத்தவரே யென்றுசெதும்பியழுதுநின்றான்

இந்திரன் மங்கைநாயகி தரு.

அழுதிடுமைந்தனேஆத்திரப்படாதே யுன் அழகியமுகவாடி
 தொழுவதினாலென்றுதுரையே நீசன்செயல்துலைக்கவசமல்லவே

சந்திரங்கதன் தரு.

விதிப்பயாவருலும் வெல்லமுடியாதென்றதந்தைதாயே
அதிதுரிதமாக அடர்மனையேகுவோம்தந்தைதாயே

வசனம்.

சருணம் சருணம் தாய்தந்தையர்களே இவ்விடத்திலிருந்து புலம்புவதினல் லாபமென்று நாமனைவரும் நமது மாளிகைக்கு போகலாம் வாரும்தாய் தந்தையே.

இந்திரன் மங்கைநாயகி கவி.

செல்லுவோம்மகனேயுன்னை சிறப்புடன்மருவுண்ணென்று
இல்லரமதில்நிருத்தி எகிவந்திடவேபின்னல்
வல்லவாயமுனையாற்றில்மடிந்ததாய் ஓலைகண்டேன்
நல்லதுபிழைத்துவந்த நடத்தையையுரைசெய்வாயே.

வசனம்.

கேளடா அபுரூபசித்திரம்போன்றஎங்கள் குமாரச்செல்வமேஉன்னை மருவுண்ணும்படி விட்டுவந்தோம் மருமாதத்தில்நீ யமுனையாற்றில் வீழ்ந்துயிரந்ததாய் ஓலைகண்டேன் மறுபடி எவ்விதம் உயிர்பிழைத்துவந்தாய் சொல்லவேண்டும் பாலகா,

சந்திரங்கதன் அகவல்.

அன்னைதந்தையரே அடியினைசருணம்
என்னிடமா மாமிபிணையடிபோற்றி
பன்னியேவாழி பகருவேன்கேளீர்
கன்னியாளுடனே கானகம்சென்று
விளையாடிநாங்கள் விடுதிசென்றிடவே
கணையினல்வருகும் காலையில்யமுனை
நதியினில்தெப்பம் நானுவிட்டேக
விதியினல்சுழல் காற்றெடுத்தடித்திடவே
படவுமேவீழ பாய்ந்துமேமுதலை
திடமுள்ளதோழரை தின்றதுயானும்
நாகலோகத்தின் நதியினில்வீழ்ந்தேன்
தேகமேசுத்தம் செய்திடுமோதர்
தக்ஷகர்க்கோடி சாற்றினரப்போ
அக்ஷணமந்திரியா லெனையழைத்தார்
சென்றவரிடத்தில் சேதியையுரைத்தேன்
நன்னரிவென்று நாகனேடசுரன்
பரிவுடன்முத்தா பரணமுந்தந்து

பிரியமாயென்னை போவென்றுரைத்தார்
விடையதுபெற்று வேகமாய்வந்து
படையதுகெலித்து பருஞ்சிறைவிடுத்தேன்
கண்ணினுல்கண்டேன் கலக்கமுவிண்டேன்
பண்ணியதவமோ பாலனைக்கண்டீர்
ஆதியாய்நீங்களறிந்திட உரைத்தேன்
சேதிமெய்யிதுவே தெரிந்திடுவீரே.

சந்திராங்கன் வசனம்.

தந்தை தாயர்களே இதுதான் என்வரலாறு இனிதாமதியாமல் மாளிகைக்கு போவோம் வாருங்கள்.

இந்திரன் கவி.

இந்திரஜேன்சித்திரவர்மராஜன்
எழில்மங்கைநாயகியும்கேட்டபோதே
அந்தணரையழைத்துமருமணமுஞ்செய்து
அவனிகிடுகிடெனகோலங்கள்வந்து
செந்திருசேர்முடிக்க விசேஷங்கள்செய்து
செகமன்னர்சூழ வாத்தியங்கள்ஓங்க
திந்தோமென நடனங்களாட
திருமுடிசந்திராங்கதர்க்கு சூட்டினரே

வசனம்.

அகோதெப்படிஎன்றால் இந்திரசேனன் மங்கைநாயகி சித்திரவர்ம்மன் முதலானவர்கள் சந்திராங்கதன் போய்வந்த சேதியைக்கேட்டபோது அளவில்லாத சந்தோஷமாகி மறையவர்களால் இரண்டாவது திருக்கல்யாணம்செய்து மருபடியும் யாவரும் ஆசீர்வதிக்க மகுடம்சூட்டுதல் காண்குக.

சந்திராங்கதனுக்கு திருமுடிதரித்தல்

பொது தரு.

திருமுடிபூண்டானே சந்திராங்கதன்—திரு
திருமுடிபூண்டானே ஜெயதேவர்மலர்போட
தெருவையர்நடமாட ஜெயசோபனம்பாட—திரு
சூதமுனிவர்ஜன காதிபதிகள்வாழ்த்த
துசஸ்த்தம்பம்தனில் கொடிதுரிதமுடனேயேத்த (திரு)
தாளதத்தளவீணை மேளமெங்குமடிக்க
சாஸ்த்திரப்படிநாலு வேதங்களும்படிக்க (திரு)
அருகில்சாமரைபோட அணித்தலைவரும்நாட
ஆகமப்படிசெங்கோலான தெண்ணளுவாழ்க (திரு)

பொது கவி.

மந்திரிமார்புடைசூழ சந்திராங்கதராஜன்
மணிமுடிபூண்டற சாளுநாளிலப்போ
சொந்தநகர்தனை நாடிவந்தராஜர்
துரிதமுடனேகிடவே யிந்திரஜேனன்
சந்ததமும்சிவ பெருமான் சன்னைப்போற்றி
சரசமுடன் தபோவனம்போய் தவமேசெய்து
அந்தமுடன்சாயுச்சபதவிபெற்று
அரன்பதத்தில் நீடூழிவாழ்ந்தார்மாதே

வாழி.

வாழி வாழி சோமசுந்தரமென்குரு
வாழி வாழி சந்திராங்கதன் ஸ்ரீமந்தினி
வாழி வாழிப்படித்திதையாடினோர்
வாழி வாழி கவிஞ்ஞர்நீடூழியே.

ஸ்ரீமந்தனிநாடகம் முற்றிற்று.

85833

ரிஜிஸ்ட்டர் காப்பிரைட்டின்

அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—ஸ்ரீமந்தனி திருக்கல்யாணநாடகம் என்னும் இந்தப்புஸ்தகத்தை அடியிற் கையொப்ப மிட்ட நான் சகல சுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு சென்னையிலும் பிரஞ் ஸியிலாக்காவாகிய புதுவையிலும் காரைக்காலிலும் ரிஜிஸ்ட்டர்காப்பிரைட்டு செய்திருப்பதால் என்னுடைய உத்திரவின்றி இந்த புஸ்தகத்தையாவது இதில் கண்டிருக்கும் சில பாகத்தையாவது பிறர் அச்சிடலாகாது இதைக் கவனியாது அச்சிடத்துணிவரேல் அதனாலுண்டாகும் நஷ்டத்திற்கு ன்மெண்டு சட்டத்திற்கும் உட்படுவரென்று அறிவிக்கின்றனன்.

நூதனபுஸ்தகவிளம்பரம்.

பண்ருட்டி சர்ப்பாலிசெட்டியார் பாம்புமந்திரம் அச்சிட்டுவருகிறோம் கூடியசீக்கிரத்தில்வெளிவரும் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிபெற்றுக்கொள்ளலாம் இதன் விலை அணா 8.

இங்ஙனம்

ஆர்—வரதைய நாயுடு,

ஷாப்புவியாபாரம்,

நெல்லிக்குப்பம்.